லங்கா சீனி கம்பெனி (பிரைவேட்) லிமிட்டட்

வருடாந்த அறிக்கை

2017

27, மெல்போர்ன் எவனியு, கொழும்பு 4, சிரிலங்கா. தொலைபேசி: +94 11 523 2583 பெக்ஸ்: +94 11 250 0674 மின்அஞ்சல்: Infosugarsrilanka@gmail.com





வரையறுக்கப்பட்ட இலங்கை சீனி (தனியார்) கம்பனி ஆண்டறிக்கை 2017

பொருளடக்கம்

	பக்க இல.
கம்பெனி மேலோட்டப்பார்வை	5
எமது தத்துவம் தொலைநோக்கு நோக்கங்கள், உபாயங்கள்	6
ஆய்வு மற்றும் அபிவிருத்தி பெருநிறுவன சமூக பொறுப்பு	
நிதி ரீதியான மற்றும் தொழிற்பாட்டு ரீதியாக முக்கியமானவைகள்	8
தவிசாளரின் மீளாய்வு	10. -11
பணிப்பாளர்.ஃ. பிரதான நிறைவேற்று அதிகாரியின் மீளாய்வு	12
பணிப்பாளர்கள் சபை	14 - 15
பெருநிறுவன ஆளுகை	16 -17
இடர் முகாமைத்துவம்	18
எமது கலாசாரம் மற்றும் பெறுமானங்கள்	20 - 21
கணக்காய்வு குழு அறிக்கை	22
சிரேஸ்ட முகாமைத்துவ குழு மற்றும் அமைப்பு ரீதியான கட்டமைப்பு	24 - 28
சுயாதீன கணக்காய்வாளர்கள் அறிக்கை	30 - 32
பூரணத்துவம் மிக்க வருமானக் கூற்று	33
நிதி நிலை தொடர்பான கூற்று	34
உரிமை முதல் மாற்ற கூற்று	35
காசோட்ட கூற்று	36
நிதி கூற்றுகளுக்கான குறிப்புகள்	37 - 59
பிரிவுசார்ந்த நிதித்தகவல் - பெலவத்த மற்றும் செவனகல	60 - 67
பிரிவுசார்ந்த ஒப்பீட்டு வரைபடம்- பெலவத்த மற்றும் செவனகல	68 - 71
முன்னேற்ற அறிக்கை	72 - 73
பெருநிறுவன தகவல்	74

கம்பெனி தொடர்பான மேலோட்டப் பார்வை

2007 ஆம் ஆண்டு 7 ஆம் இலக்க கம்பெனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட பொது தொழில் முயற்சியாக லங்கா சீனி கம்பெனி தனியார் லிமிடெட் காணப்படுகின்றது இதன் பிரதான பங்குதாரர்களாக திறைசேரியின் செயலாளர் மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் துறை மற்றும் ஏற்றுமதி விவசாய அமைச்சினால் நியமிக்கப்பட்ட பணிப்பாளர் சபை ஆகியன காணப்படுகின்றன. இலங்கையில் மிகப்பெரிய சீனி உற்பத்தியாளர் என்ற முறையில் இலங்கை சீனி கம்பெனி தனியார் லிமிடெட் ஆனது நாட்டின் வருடாந்த சீனி தேவையில் 8% வீதத்தினை உற்பத்தி செய்கின்றது. அதேவேளை நாட்டின் எத்தனோல் தேவையின் 37% வீதத்தை இது பூரணப்படுத்துகின்றது.



வரையறுக்கப்பட்ட இலங்கை சீனி (தனியார்) கம்பனி
ஆண்டறிக்கை 2017

எமது தத்துவம்

வுகிராமியப் பொருளாதாரத்தை மேம்படுத்துவதன் மூலம் தேசிய விருதிற்கு பங்களிப்புச் செய்தல் அதன் மூலம் கரும்பு. சீனி உற்பத்தி தொழில் துறையுடன் தொடர்புடைய விவசாயிகள் அது சமூக, பொருளாதார அந்தஸ்தை மேம்படுத்துதல்

எமது தொலைநோக்கு

சீனி உற்பத்தியில் தன்நிறைவு அடைதல்

எமது நோக்கங்கள்

பணி நோக்கு 333 - குறுகியகால (2008 மூன்று வருடம்)	நோக்கங்கள் 555 - நீண்ட காலம் (2020 ஐந்து வருடங்கள்)
50,000 மெட்ரிக் டொன் சீனி உற்பத்தியை அடைதல்	50,000 மெட்ரிக் டொன் சீனி உற்பத்தியை அடைதல்
15,000 விவசாய குடும்பங்களுக்கு உதவுதல்	20,000 விவசாய குடும்பங்களுக்கு உதவுதல்
50,000 மறைமுக வேலை வாய்ப்புகளை ஏற்படுத்துதல் தேறிய வருமானத்தை மாதாந்தம் 35,000 ரூபாய் வரையில் ஒரு விவசாயி குடும்பத்திற்கு அதிகரிக்கச் செய்தல்	60,000 மறைமுக வேலை வாய்ப்புகளை ஏற்படுத்துதல் தேறிய வருமானத்தை மாதாந்தம் 35,000 ரூபாய் வரையில் ஒரு விவசாயி குடும்பத்திற்கு அதிகரிக்கச் செய்தல்.
தேசிய சீனி தேவைப்படின் 15% பங்களிப்புச் செய்தல்	தேசிய சீனி தேவைப்படின் 40% பங்களிப்புச் செய்தல
ஒரு பில்லியன் தேறிய இலாபம்	இரண்டு பில்லியன் தேறிய இலாபம்
ரூபாய் 15 பில்லியன் பெறுமதியான வெளிநாட்டு நாணயமாற்றை சேமித்தல்	ரூபாய் 20 பில்லியன் பெறுமதியான வெளிநாட்டு நாணயமாற்றை சேமித்தல்
45 ஆறு மின் உற்பத்திக்கு உதவுதல்	60 ஆறு மின் உற்பத்திக்கு உதவுதல்

உபாயங்கள்

வெற்றி- வெற்றி வியாபார பங்காண்மைக்காக எமது பயிர் செய்கையாளர் வளர்ச்சி மாதிரி
உயர் விளைச்சலைத் தரக்கூடியவற்றை நடுவதன் மூலம் வினைத்திறன் மிக்க விரிவாக்க சேவை மற்றும் விவசாயிகளுக்கு சிறந்த இலாபம் கிடைப்பதை உறுதி செய்தல் ஆகியவற்றுடன் கூடிய சிறந்த விவசாய நடைமுறைகள்
தரமான சிறந்த உற்பத்தி ஊக்குவிப்புகள் மூலம் விவசாயிகளை ஊக்குவித்தல்
ஊக்குவிப்புகளை அடிப்படையாகக் கொண்டு உற்பத்தி மற்றும் செயலாற்றுகை தொடர்பில் பணியாளர்களை ஊக்குவித்தல்

ஆய்வு மற்றும் அபிவிருத்தி

ஆய்வு மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகள் ஆகியன கரும்பு உற்பத்தியை அதிகரிக்க கூடிய விதத்தில் இலங்கை கரும்பு நிறுவனத்துடன் கூட்டிணைந்து மேற்கொள்ளப்படும்

கூட்டுறவு சமூக பொறுப்பு

கரும்பு உற்பத்தியாளர்களது வருமானத்தை அதிகரிக்கச் செய்ய வேண்டும் எனவும் அதன் மூலம் சமூகத்திற்கு பெறுமதிகளை சேர்த்து அவர்கள் தொழிற்படுகின்ற சுற்றாடலுக்கு உதவ வேண்டும் எனவும் நாம் நம்புகின்றோம்.



வரையறுக்கப்பட்ட இலங்கை சீனி (தனியார்) கம்பனி
நிதி ரீதியான மற்றும் தொழிற்பாட்டு முக்கியமானவைகள் - 2017

இலக்கங்கள் இலங்கை ரூபாய் மில்லியனில் தரப்பட்டுள்ளது	2016	2017
நிதி ரீதியாக முக்கியத்துவம் பெற்றவைகள்		
விற்றுமுதல்	7,728.89	7,616.94
விற்பனைக்கான செலவு	(5,547.83)	(6,102.70)
மொத்த இலாபம்	2,181.06	1,514.24
வருமானத்திற்கு முன்னரான தேறிய இலாபம்	1,006.29	402.70

தொழில்ரீதியான செயலாற்றுகை	2016	2017
பயிற்செய்கை		
பயிர் செய்யக்கூடிய பிரதேசம் (ஹெக்டையர்)	17,499	14,265
பயிர் செய்யப்பட்ட பரப்பளவு (ஹெக்டையர்)	13,022	12,622
பயிர் செய்யப்பட்ட அளவின் விகிதம்	74%	86%

அறுவடை நிகழ்ச்சித்திட்டம்	2016	2017
அறுவடை செய்யப்பட்ட கரும்பு	651,094	589,139
கடந்த வருடங்களில் ஏற்பட்ட அதிகரிப்பு குறைவு வீதம்	16%	-9.52%
கரும்பு மீண்டெலல் வீதம்	7.90%	7.27%

கரும்பு உற்பத்தி	2016	2017
உற்பத்தி மெட்ரிக் டன்	51,422	42,822
வருடாந்தம் ஒருவருக்கான தொண்கள்	10.49	9

மனித வளங்கள்	2016	2017
நிரந்தரம்	1,429	1,351
ஒப்பந்தம்	1,176	1,232
தற்காலிகம்	1,731	2,131
பருவ காலத்திற்கு ஏற்றவை	527	-
பயிற்சியாளர்கள்	37	111
மொத்தம்	**4900**	**4,825**





வரையறுக்கப்பட்ட இலங்கை சீனி (தனியார்) கம்பனி
ஆண்டறிக்கை 2017

தவிசாளரின் மீளாய்வு

பணிப்பாளர்கள் சபையின் சார்பாக லங்கா சீனி கம்பெனி தனியார் லிமிடெட் 2017 டிசம்பர் 31உடன் முடிவடைந்த வருடத்திற்கான ஒருங்கிணைக்கப்பட்ட வருடார்ந்த அறிக்கை மற்றும் நிதிக் கூற்றுகளை வழங்குவதில் நான் மகிழ்ச்சி அடைகின்றேன்

மீளாய்வுக்கு உட்பட்ட காலப்பகுதியில் கம்பெனி ஆனது பல்வேறு விதமான சவால்களை எதிர்கொள்ள வேண்டி ஏற்பட்டது. இவற்றுள் சாதகமற்ற காலநிலை நிலைமைகள் இது கரும்பு அறுவடை மற்றும் கரும்பு மீண்டெலல் விகிதம் ஆகியவற்றை பாதகமாக தாக்கியது. குறிப்பிட்ட வருட காலப்பகுதியில் பொழுது கரும்பு உற்பத்தியில் கணிசமான வீழ்ச்சி காணப்பட்டது. கடந்த வருடங்களுடன் ஒப்பிடுகையில் ஸ்திரமற்ற பொருளாதார நிலைமைகளும் காணப்பட்டன. இருப்பினும் எமது கம்பெனி ஆனது வரிக்கு முன்னரான லாபத்தினை ரூபாய் 402 மில்லியன் ரூபாயாக வேலை முடிந்தது. இது கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 60% வீத வீழ்ச்சியாகும்.

பொருளாதார சுற்றாடல்

2017 ஆம் ஆண்டின் இலங்கையின் உண்மையான பொருளாதார வளர்ச்சி 3.1% வீதமாக பதியப்பட்டது.2016 இது 4.5% வீதமாகும். இலங்கையின் பாரம்பரிய ஏற்றுமதி சந்தைக்கான கேள்வியில் குறைவான வளர்ச்சியே காணப்பட்டது. அதேவேளை ஏற்றுமதி துறை சார்ந்த வளர்ச்சியில் சாதகமான தாக்கங்கள் ஏற்பட்டன. மேலும் உறுதியான இலங்கையின் பொருளாதாரமானது குறுகிய கால மூலதன வெளியூட்டங்களுக்கு காரணமானது. இத்தகைய அபிவிருத்திகளை தாக்கமானது குறைவான சர்வதேச பொருட்களின் விலையில் சில தாக்கங்களை ஏற்படுத்தியது. வருமானம் வளர்ச்சிக்கு கண்டதன் காரணமாக உள்நாட்டு நுகர்வுகள் அதிகரித்தன. குறிப்பாக பொதுமக்கள் மற்றும் தொழிலாளர்கள் மத்தியில் இவை அவதானிக்கப் பட்டன. பொருளாதாரம் சார்ந்த இந்த சகல துறைகளும் 2017 உண்மையான பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்தன. விவசாயம் மற்றும் சேவை சார்ந்த செயற்பாடுகள் 0.8% வீதம் முறையை, 3.2% வீதத்தினால் அதிகரித்தன. 2017 ஆம் ஆண்டில் கைத்தொழில் துறையுடன் தொடர்புடைய செயற்பாடுகள் 3.9% வீதத்தினால் அதிகரித்ததது. வருடாந்தம் அளவிடப்பட்டு வரும் பணவீக்கம் மாற்றம் தொடர்பில் நோக்குகையில் தேசிய நுகர்வோர் விலை சுட்டென் ஆனது (ஜீஜ, 2013 = 100) 2017 ஆம் ஆண்டில் இது 11.3 வீதத்தினால் அதிகரித்துத. 2016 ஆம் ஆண்டில் ஒப்பிடுகையில் இது 3.1 வீதமாகும்.

தொழிற்துறை சார்ந்த மேலோட்டப் பார்வை

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் மோசமான காலநிலையின் காரணமாக கரும்பு உற்பத்தித்துறை ஆனது மோசமாக பாதிக்கப்பட்டது. கம்பெனி ஆனது 42,822 ஆவ சீனியை இவ்வருட காலப்பகுதியின் பொழுது உற்பத்தி செய்யக் கூடியதாக இருந்தது. 2016 உடன் ஒப்பிடுகையில் இதன் 16.72% வீத வீழ்ச்சி ஆகும் மற்றும் உள்நாட்டு சீனி தேவைப்பாட்டில் இது 7% வீதம் ஆகும். மேலும் தேசிய சீனி உற்பத்தியில் இது 86% வீதம் ஆகும்.

அதிகளவில் சீனி உற்பத்தி செய்யப்பட்ட காரணமாக உலகளாவிய ரீதியில் சீனியின் விலை பாரிய வீழ்ச்சி கண்டது. கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் உற்பத்தியாளர்கள் மற்றும் இறக்குமதியாளர்கள் தமக்கே உரிய பாதுகாப்பு கையிருப்புகளை மேற்கொண்டனர். இதன் காரணமாக சந்தையில் விற்பனை விலை வீழ்ச்சி கண்டது. பிரதான மொத்த உற்பத்தியாளர்கள் நாம் குறிப்பிட்ட விலையில் சீனியை கொள்வனவு செய்வதற்கு மறுத்தனர். இருப்பினும் பின்னர் சீனிக்கான செஸ் வரியை அரசாங்கம் அதிகரித்ததன் காரணமாக கம்பெனியானது சிறந்த மொத்த விற்பனை விலையை பெற்றுக்கொள்ள முடிந்தது. குறிப்பிட்ட வருடக் காலப் பகுதியில் பொழுது இது ஒரு கிலோவுக்கு 100$) ரூபாயை விட அதிகமாகும்.

வரையறுக்கப்பட்ட இலங்கை சீனி (தனியார்) கம்பனி
ஆண்டறிக்கை 2017

கம்பெனி செயலாற்றுகை

மீள் ஆய்வுக்கு உட்பட்ட காலப்பகுதியினுள் கம்பெனியானது ரூபாய் 7,616 மில்லியன் ரூபாயை வருமானமாக பதிவு செய்தது. கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் கடந்த வருட வருமானம் ஆனது ரூபாய் 7,728 மில்லியன் என்பது குறிப்பிடத்தக்கது.2017 ஆம் ஆண்டில் கம்பெனி ஆனது வரிக்கி முன்னரான லாபமாக ரூபாய் 402 மில்லியனை பதிவு செய்தது.2016 ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது 60% வீத வீழ்ச்சி ஆகும். 2017 ஆம் ஆண்டில் சீனி உற்பத்தியானது 42,822 மெட்ரிக் டன்னாக வீழ்ச்சி கண்டது.2016 இது 51,422 மெட்ரிக் டான் என்பது குறிப்பிடத்தக்கது. வருமான விகிதங்கள் அதிகரிக்கப்பட்ட பொழுதிலும் சீனியின் விற்பனை விலை வீழ்ச்சி அடைந்ததன் காரணமாக எதிர்பார்க்கப்பட்ட வருமானத்தை அடைய முடியவில்லை. ஆக குறைவான விலையில் அதிகளவான சீனியை வெளிநாட்டில் இருந்து உற்பத்தி செய்ய வேண்டி இருந்தது. 2017 ஆம் வருடத்தில் 7,045,223 லிட்டர்களாக காணப்பட்ட ENA உற்பத்திகள் 2016 ஆம் ஆண்டில் 11,917,279 லிட்டர்களாக வீழ்ச்சி கண்டது. இதன் காரணமாக குறிப்பிட்ட வருடத்தின் பொழுது வருமானமானது 113 மில்லியன் ரூபாயில் வீழ்ச்சியடைந்தது. இருப்பினும் விற்பனை செலவு 10 வீதத்தினால் அதிகரித்ததன் காரணமாக இதற்கென 555 மில்லியன் ரூபாய் செலவிட வேண்டி ஏற்பட்டது இது வரிக்கு முன்னதான லாபத்தில் எதிர்மறையான தாக்கத்தினை ஏற்படுத்தியது இதனால் வரிக்கு முன்னதாக இலாபம் ரூபாய் 604 மில்லியனால் குறைவடைந்தது. நிதி ரீதியான செலவு 48 மில்லியனினால் அதிகரித்தது. அதேவேளை வருட காலத்தின் பொழுது நிதி ரீதியான வருமானம் 50 மில்லியனினால் குறைவடைந்தது இத்தகைய சகலவிதமான காரணிகளும் செல்வாக்கு செலுத்தின. குறிப்பிட்ட வருடக்காலப் பகுதியில் பொழுது பேரண்ட மற்றும் ஏனைய நூண் பொருளாதார சுற்றாடல் சார் காரணிகள் தேறிய

நலனோம்புகை

முன்னோக்கி பார்க்கையில் இலங்கையின் பொருளாதாரம் ஆனது துரிதமாக முன்னோக்கி பயணிக்கின்ற அதேவேளை அதன் அபிவிருத்தி சார்ந்த இலக்குகளை அடையும் என நாம் எதிர்பார்க்கின்றோம். அரசாங்கத்தின் கொள்கைகள் மற்றும் வட்டி வீதத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி ஆகியன புதிய முதலீடுகளை மேற்கொள்வளை வழங்குகின்றன. எமது உற்பத்தி பொருட்களுக்கு சந்தையில் நிரந்தரமான வாய்ப்பு உள்ளது. எமது முகாமைத்துவம் ஆனது தொடர்ச்சியாக கரும்பு உற்பத்தியை அதிகரிப்பதற்கான வாய்ப்புகளில் கவனம் செலுத்தி வருகின்றது. சிறந்த பெறுபேறுகளை அடையும் முகமாக தற்போது எம்முடன் காணப்படுகின்ற விவசாயிகளை உற்சாகப்படுத்துவதுடன் தொழில்துறைக்கு புதிய விவசாயிகளை கொண்டுவருவதும் முக்கியமாகும்.

புதிய நிலங்களை பெற்றுக்கொள்வது மற்றும் எமது பெருந்தோட்டத்துறையில் உற்பத்தியை அதிகரிப்பது ஆகியவை முக்கியமாகும். பிரதான உற்பத்திக்கு மேலதிகமாக என்பது தொழிற்பாட்டின் மூலம் அதிகளவிலான நன்மைகளை பெற்றுக்கொள்ளும் முகமாக துணை உற்பத்திகளை அதிகரிப்பதற்கான விடயங்களிலும் நாம் அக்கறை செலுத்தி வருகின்றோம்.

பாராட்டுதல்

பணிப்பாளர்கள் சபை, கம்பெனியின் முகாமைத்துவம் மற்றும் பணியாளர்கள் ஆகியோர் தொடர்ச்சியாக வழங்கிவரும் அர்ப்பணிப்பு மிக்க செயற்பாடுகளுக்காக அவர்களுக்கு எனது உளமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.
""

மேலும் தொடர்ச்சியாக இணைந்து இருந்தமைக்காக கரும்பு விவசாயிகள், நுகர்வோர்கள், சீனி மொத்த வியாபாரிகள், துறையை சார்ந்தவர்கள் மற்றும் ஏனைய அரசாங்க நிறுவனங்கள் ஆகியவற்றிற்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும் எனக்கு பல்வேறு விதங்களில் உதவிய பணிப்பாளர் சபை உறுப்பினர்களுக்கும் மற்றும் கம்பெனியை வெற்றிப் பாதையில் இட்டுச் சென்ற பல வழிகட்டிகளை வழங்கிய சிரேஸ்ட முகாமைத்துவத்திற்கும் எனது உளமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன்.

நவீன் அதிகாரம
தவிசாளர்



வரையறுக்கப்பட்ட இலங்கை சீனி (தனியார்) கம்பனி
ஆண்டறிக்கை 2017

பணிப்பாளர்/ பிரதான நிறைவேற்று அதிகாரியின் மீளாய்வு

" தோல்விகள், தொடர்ச்சியான தோல்விகள் ஆகியனவே உங்களது வெற்றிக்கும் சிறப்பான அடைவுக்குமான வழிகாட்டிகள்"

C.S.லுயிஸ்

லங்கா சீனி கம்பெனி என்ற முறையில் நாட்டின் மிகப்பெரிய சீனி கம்பெனி மற்றும் எத்தனோல் விநியோகித்தல் என்ற முறையிலே எமது பலம் மீது நம்பிக்கை கொண்டவராக இருக்கின்றோம். நாட்டின் சிறந்த உற்பத்தி பொருட்களை வழங்குவதுடன் சிறப்பான கருத்துக்கள், உபாயங்கள் துரித நடவடிக்கைகள் ஆகியவற்றின் மூலம் வெற்றியை அடைந்து இருக்கின்றோம். எம் மத்தியில் சிறந்த அர்ப்பணிப்புடன் சிறப்பான திறன் படைத்த தொழிற் படையும் உண்டு.

எமது தொழில்நுட்ப ஆற்றல்கள் உலகில் காணப்படும் புதிய தொழில்நுட்பம், பல்வகைமை ஆற்றல்கள் இவற்றைப் பயன்படுத்தி உற்பத்தியின் ஆற்றலை அதிகரித்து அதன் மூலம் வெற்றியை அடைவதுடன் சிறந்தவற்றுள் மிகச்சிறப்பானவற்றை எவ்வாறு வழங்குவது என்பதையும் நாம் அறிவோம். நாட்டின் சீனி உற்பத்தியாளர் என்ற முறையில் வழங்கும் காத்திரமான அர்ப்பணிப்புகள் மூலம் பங்களிப்பு செய்கின்ற இத்தருணத்தில் 2017 ஆம் நீதி ஆண்டிற்கான மீளாய்வினை சமர்பிப்பதில் நான் பெரிதும் உவகை அடைகின்றேன். 2012 மற்றும் 2015 ஆண்டுகளில் தொடர்ச்சியாக நாம் நட்டங்களை எதிர்கொண்ட பொழுதிலும் எனது கம்பெனி ஆனது 2016 மற்றும் 2017 ஆண்டுகளில் லாபம் அடைய ஆரம்பித்தது. எமது முகாமைத்துவத்தின் அர்பணிப்பு மற்றும் அவர்கள் நடைமுறைப்படுத்திய உபாயங்கள் ஆகியனவே உற்பத்தியை அதிகரிப்பதற்கு வழிகூலின. மேலும் 2016 மற்றும்2017 ஆம் ஆண்டுகளில் பிரைவுன் சீனி மற்றும் எத்தனோல் ஆகியவற்றிற்கு விலை கிடைத்தன.

விசேடமாக 2017 ஆம் ஆண்டு இலங்கை சீனி கம்பெனி தனியார் லிமிடெட் ஆனது குறிப்பிடக்கூடிய வளர்ச்சியை காட்டியதுடன் குறிப்பிடக்கூடிய பல வெற்றிகளையும் அடைந்தது. அரசாங்கத்திற்கு சொந்தமான நிதி நிறுவனம் என்ற வகையில் ஐந்து வருடங்களை பூர்த்தி செய்த அதேவேளை 2012 ஆம் ஆண்டு முதல் சுய நிதியிடல் மூலம் லாபங்களை அடைந்தது.

நிதி ரீதியான மீளாய்வு

2015 டிசம்பர் முதல் திரு நவீன் அதிகரணம அவர்களது தலைமையிலான பணிப்பாளர் சபை மூலமாக நடைமுறைப்படுத்தப்பட்ட புதிய உபாய முறைகளின் காரணமாக 2017 டிசம்பர் உடன் முடிவடைந்த வருடத்தில் LSCPL ஆனது 7.6 பில்லியன் ரூபாயை வருமானமாக பதிந்ததுடன் வரிக்கு முன்னரான வருமானமாக ரூபாய் 402 மில்லியன் ரூபாயை பெற்றுக்கொண்டது. 2016 நிதியாண்டு காலப்பகுதியில் முகாமைத்துவம் ஆனது மீள் உருவாக்க செயல்முறை ஒன்றினை அறிமுகம் செய்தது இதன் காரணமாக 2016 ஆம் ஆண்டு முன்னர் லாபமாக ஒரு பில்லியன் ரூபாயை பெற்றுக் கொள்ள முடிந்தது. அதேவேளை அதே வருடத்தில் ரூபாய் 7.7 பில்லியன் வருமானமாக பதியப்பட்டது.

தொழிற்பாட்டு மீளாய்வு

2017 ஆண்டில் கம்பெனி ஆனது 42"822 மெட்ரிக் டன் பிரைவுன் சீனியை உற்பத்தி செய்தது.2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது 17% வீத வீழ்ச்சியாகும். அதேபோல் 2017 ஆம் ஆண்டில் கம்பெனியினால் 7,045,223 கிலோலீட்டர் எதனோலை உற்பத்தி செய்ய முடிந்தது. 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் எத்தனாலே உற்பத்தி 40% வீத வீழ்ச்சி கண்டது. இருப்பினும் இலங்கையின் சீனி கைத்தொழில் துறையில் இது ஓர் பொற்காலத்தின் ஆரம்பம் என குறிப்பிட முடியும்.

முடிவு

2017 ஆண்டு காலப்பகுதியில் எமக்கு வழங்கிய வழிகாட்டிகள் மற்றும் உதவிகள் ஆகியவற்றுக்காக எங்களுடைய தவிசாளர் திரு நவீன் அதிகாரம அவர்களுக்கும் பணிப்பாளர்கள் சபைக்கும், சிரேஸ்ட முகாமைத்துவ உறுப்பினர்கள் மற்றும் பணியார் தொகுதியினர் ஆகியோருக்கு என்னுடைய உளமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன்

M.S.M. பைசர்
பணிப்பாளர் / பிரதான நிறைவேற்று அதிகாரி



வரையறுக்கப்பட்ட இலங்கை சீனி (தனியார்) கம்பனி
ஆண்டறிக்கை 2017

பணிப்பாளர்கள் சபை

எமது தவிசாளர்

திரு நவீன் அதிகாரகம - சென்ட்ரல் மிசோரி ஸ்டேட் பல்கலைக்கழகம், கன்சாஸ் சிட்டி, மிசோரி , ஐக்கிய அமெரிக்கா, விஞ்ஞான இளமானி பட்டம்

எமது தவிசாளர் திரு நவீன் அதிகாரகம அவர்களுக்கு 23 வருடங்களுக்கு மேற்பட்ட தொடர்ச்சியான அனுபவம் கூட்டுறவு சிறந்த ஆளுகை, வியாபார மீள் கட்டமைத்தல், முடங்கிய அரச தொழில் முயற்சிகளுக்கு புத்துணர்ச்சி அளித்தல், போன்ற நிறுபனமான அனுபவங்கள் காணப்படுகின்றன.
இவர் ஓர் உபாய ரீதியான தலைவர், நிரூபிக்கப்பட்ட தொலை நோக்கு உடையவர், வெற்றிகரமான தொழில் முயற்சியாளர், 500 மேற்பட்ட கம்பெனிகளில் அனுபவமுடைய தொலை தொடர்பாடல் தொழில்நுட்பம் மற்றும், நிறைவேற்று முகாமைத்துவம் ரீதியான அனுபவங்களைக் கொண்டவர், மேலும் இலங்கையிலும் இலங்கைக்கு வெளியே ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய ராஜ்யம், சிங்கப்பூர், சீனா, நேபாளம் போன்ற நாடுகளில் பல்தேசிய, பல்கலாசார, பல் சூழ்நிலை தொடர்பான அனுபவங்களை தன்னகத்தே கொண்டவர். பல் பரினாம சூழ்நிலையில் கலப்பு மற்றும் முற்கொடுப்பனவு, பிற்கொடுப்பனவு சேவை தொடர்பான அனுபவங்களை கொண்டவர் அத்தோடு பல்வேறுவிதமான CRM முறைகளை முன்னெடுத்து நடைமுறைப்படுத்தியவர், முஊளு (இணையம் மூலம் கட்டணம் அறவிடும் முறைகள்) டெலிகொம் கட்டண அறவீட்டு முறைகள்) ,NGN தளங்கள், SPD, VAS தளங்கள் ஆகியவற்றில் மோசடி முகாமைத்துவ முறைகள் தொடர்பான அனுபவங்களையும் கொண்டவர்.

இவர் பின்வரும் குழுக்கள், அமைப்புகளில் பணியாற்றிய அனுபவங்கள் உண்டு.
இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக சபை உறுப்பினர்

பணிப்பாளர்- இலங்கை காணி நிரப்பல் மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனம்

பணிப்பாளர்- இலங்கை வாடி வீடு லிமிடெட்

ஆலோசனை குழு உறுப்பினர்- கருத்திட்ட முகாமைத்துவ நிறுவகம் இலங்கை சமவாயம்

பணிப்பாளர்- திறைசேரி பிரதிநிதி

திரு டிவி வீரசேன - கணக்கியல் மற்றும் நிதி முகாமைத்துவத்தில் பட்டப்பின் டிப்ளோமா

திரு.டி.வி வீரசேன அவர்கள் இலங்கை திறைசேரியின் பணிப்பாளர் நாயகம் ஆகும். இலங்கை சீனி கம்பெனி தனியார் லிமிடெட் 2013 ஆரம்பிக்கப்பட்டதன் முதல் அதன் பணிப்பாளர்கள் சபையில் திறைசேரி பிரதிநிதியாக பணியாற்றி வருகின்றார். LSPL ஆரம்பிக்கப்பட்டது முதல் அதன் கணக்காய்வு குழுவின் தலைவராக பணியாற்றி வருகின்றார்.

தொழில் தகைமைகள் /அனுபவங்கள்

இலங்கை கணக்காளர்கள் சேவை, பகிரங்க நிதி கணக்காளர்கள் சபை உறுப்பினர் (பொதுத்துறை பிரிவு - CA இலங்கை)
கணக்கியலில் உயர் தேசிய டிப்ளோமா - தொழில்நுட்ப கல்லூரி
கணக்கியலில் உயர் தேசிய டிப்ளோமா - தொழில்நுட்ப கல்லூரி
பொது நிதி முகாமைத்துவ டிப்ளோமா –SLDIA
பட்டய கணக்காளர் இறுதி
தொழில்வாண்மை ஆங்கிலத்தில் டிப்ளமோ/SLDIA
வியாபார கற்கைகளில் டிப்ளமோ - தொழில்நுட்ப கல்வி

எமது பணிப்பாளர;/ பிரதான நிறைவேற்று அதிகாரி

திரு. எம். எஸ். எம். பவுசர் - MBA (UK)- BA (Hon) வியாபார நிர்வாகம் ஐக்கிய ராஜ்யம்.

திரு மொஹமட் செரிப்டீன், மொஹமட் பவுசர் இவர் இலங்கை சீனி கம்பெனி தனியார் லிமிடெட்டின் பணிப்பாளர்/ பிரதான நிறைவேற்று அதிகாரியாக பணியாற்றி வருகின்றார். இவர் மிடெக்ஸ் பல்கலைக்கழகம்(ஐக்கிய ராஜ்யம் பட்டத்தினை பெற்றவராவார். மேலும் வொலஹேம்டன் பல்கலைக்கழகத்தில் இருந்து வியாபார நிர்வாகத்தில் முதல்நிலை பட்டத்தினை பெற்றவர். இவர் தொழில் ரீதியாக ஒரு சந்தைப்படுத்தினர்.

இவர் பின்வரும் வர்த்தக நிறுவனங்களில் பணியாற்றியுள்ளார்
·பணிப்பாளர் நாயகம்-நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபை

பிரதான தொழிற்பாட்டு அதிகாரி - BCAS வளாகம்

ஆலோசகர் -சந்தைப்படுத்தல் மற்றும் தொடர்பாடல் - பேரடைஸ் பார்ம் பிரைவட் லிமிடெட்

பணிப்பாளர்

டாக்டர் நிஹால் சமரப்பிள்ளை - BSc (விவசாயத்தில் சிறப்புத் தேர்ச்சி)- MSc (விவசாய விரிவாக்கம் PHD பொருளாதாரம்)

டாக்டர் நிஹால் சமரப்பிள்ளை அவர்கள் தொழில் ரீதியாக ஓர் பொருளியல், கொள்கை பகுப்பாய்வாளர் ஆவர். ஆரச மற்றும் தனியார் துறைகளில் இத்துறை சார்ந்த அனுபவம் 35 வருடங்களுக்கு மேற்பட்டதாக காணப்படுகின்றது. மேலும் ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB) , விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியம் (IFAD) ஐநா ஏஜென்சி போன்ற சர்வதேச அமைப்புகளில் ஆலோசகராக பணியாற்றிய அனுபவம் இவருக்கு உண்டு. இவர் பல்வேறு விடயங்கள் தொடர்பில் பல ஆக்கங்களை பிரசுரித்துள்ளதுடன் 300க்கும் மேற்பட்ட அறிக்கைகள், கொள்கை நிறுபனங்கள், ஆய்வுக்கட்டுரைகள் போன்றவற்றை எழுதியுள்ளார். அபிவிருத்தி திட்டமிடல் கொள்கை பகுப்பாய்வுகள், முதலீடுகள், வியாபார மேம்பாடு, சர்வதேச உடன்படிக்கை ஒப்பந்தங்கள் போன்ற விடயங்களில் விசேட நிபுணத்துவத்தை பெற்றவராவார்.

தொழிற் தகமை/ அனுபவங்கள்

டோக்கியோ சிமென்ந்து கம்பெனி லங்கா PLC கொழும்பு 13 இலங்கை (பணிப்பாளர்/ பொருளாதார ஆய்வுகள்) 2015
முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு (பணிப்பாளர் நாயகம்/ முதலீடு) 2013 - 2014

இலங்கை முதலீட்டு சபை (நிறைவேற்று பணிப்பாளர்/ ஆய்வு மற்றும் கொள்கை பரிந்துரைத்தல்) 2001 - 2014
· இலங்கை முதலீட்டு சபை (பணிப்பாளர்/ ஆய்வு) 1998 - 2001

ரப்பர் ஆராய்ச்சி நிறுவகம் - இலங்கை - டாட்டோன்பில்ட்- அகலவத்தை. இலங்கை(விவசாய பொருளியல் நிபுணர்) 1991 - 1998

ரப்பர் ஆராய்ச்சி சபை, நிவித்திகலகேல, மத்துகம இலங்கை (பயிற்சி அதிகாரி) 1981 - 1991

மகாவலி அபிவிருத்தி சபை, இலங்கை (உதவி மண் இரசாயனவியலாளர்) 1979 -1981

பணிப்பாளர்

லெப்ரின் கேர்னல் யு.பி.பி. கவிகேசவ

இலங்கை சீனி கம்பெனி தனியார் லிமிடெட் பணிப்பாளர்கள் சபை உறுப்பினர்களில் ஒருவராக தற்சமயம லெப்டினன் கேர்னல் யு.பி.பி. கவிகேசவ அவர்கள் பணியாற்றி வருகின்றார். இவர் பல்கலைக்கழக பட்டதாரி ஆகும். இவர் பௌதீக விஞ்ஞான பிரிவில் இரண்டாவது உயர் மேல்நிலையில் விஞ்ஞான மாணி பட்டத்தை பெற்றவராவார். இவர் தொழில் ரீதியாக பொறியியலாளராக காணப்படுவதுடன் இலங்கை ராணுவத்தின் அதிகாரியாக பணியாற்றி வருகின்றார். மேலும் இலங்கை கூட்டிணைக்கப்பட்ட பொருளியலாளர் நிறுவகத்தின் உறுப்பினராகவும் இலங்கை தொழில்வாண்மை சங்கங்கள் அமைப்பின் உறுப்பினராகவும் இருக்கின்றார்.

தொழில் தகமைகள் மற்றும் அனுபவங்கள்

இவர் பின்வரும் வர்த்தக அமைப்புகளில் பணியாற்றியுள்ளார்
பொது முகாமையாளர் - வேரோனா இன்டர்நே'னல் பிரைவட் லிமிடெட்
கருத்திட்ட கணக்காய்வாளர் - லேக்சி பிரைவட் லிமிடெட்

இராணுவ அதிகாரி- இலங்கை இராணுவம்

பணிப்பாளர்

திரு அருணசதுகார கீர்த்தி ரத்ன

திரு அருணசதுகார கீர்த்தி ரத்னஅவர்கள் தகவல் தொழில்நுட்பத்தில் தொழில்வாண்மை தேர்ச்சியை பெற்றவராவர் இவர் எச் எம் கே ஹார்லிங்ஸ் பிரைவேட் லிமிடெட்டின் முகாமைத்துவ பணிப்பாளர் ஆவார்.2012 ஆம் ஆண்டின் இளம் தொழில் முயற்சியாளருக்கான விருது இவருக்கு வழங்கப்பட்டது. (இந்த விருதினை குஊஊஜளுடு வழங்கியது (தேசிய விருது மற்றும் சப்ரகமுவ மாகாண விருது பெற்றவர்)

தொழில் தகைமைகள் அனுபவம்

முகாமைத்துவ பணிப்பாளர் என்.எச்.கே. ஹோல்டிங் பிரைவட் லிமிட்டட்

பணிப்பாளர் - இலங்கை சீனி கம்பெனி தனியார் லிமிடெட்
ஆலோசகர் - நில வடிவமைப்பு- ளுேமஆ பசநநெ பல்கலைக்கழகம்

காயே இளம் தொழில் முயற்சியாளர் மாநாட்டில் பிரதிநிதியாக பங்கேற்றவர் 2012, 2013 மற்றும் 2014

பணிப்பாளர்

திரு ஏ.எச்.எம். அலவி அவர்கள் தற்போது லங்கா சீனி கம்பெனி பிரைவட் லிமிட்டடின் பணிப்பாளர்கள் சபை உறுப்பினராக பணியாற்றுவதுடன் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சை பிரதிநிதித்துவம் செய்கின்றார்.

திரு ஏ.எச்.எம். அலவி அவர்கள் தற்போது லங்கா சீனி கம்பெனி பிரைவட் லிமிட்டடின் பணிப்பாளர்கள் சபை உறுப்பினராக பணியாற்றுவதுடன் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சை பிரதிநிதித்துவம் செய்கின்றார்.

கூட்டிணைவு ஆளுகை

பொறுப்புக்கூறல், வெளிப்படைத்தன்மை, நேர்மை, பணிப்பாளர் சபை அல்லது சிரேஸ்ட முகாமைத்துவம், நெறிப்படுத்துதல், கட்டுப்படுத்துதல்,பெருநிறுவன நடவடிக்கைகளை முகாமைத்துவம் மூலம் செய்தல் ஆகியன தொடர்பான நேர்மை மற்றும் பொறுப்பு ஆகியவற்றை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக இலங்கை சீனி கம்பெனியானது பெரு நிறுவன ஆளுகையின் சட்டகத்தை பின்பற்றுகின்றது. பெருநிறுவன ஆளுகையின் சிறந்த நடைமுறைகள் வழிகாட்டுவது பொருத்தமான பெருநிறுவன உபாய முறைகளை விருத்தி செய்து அவற்றை நடைமுறைப் படுத்துவதன் மூலம் முன்னேற்றத்தை நோக்கி பயணிக்கின்றது. இத்தகையபெருநிறுவன ஆளுகை நடைமுறைகள் ஆனது தீர்மானம் மேற்கொள்ளலின் தன்மையை மேம்படுத்துவதுடன் கம்பெனியின் வளர்ச்சி இலாபம் பெறும் தன்மை , நிலைபேறான தன்மை ஆகியவற்றை உறுதிப்படுத்துகின்றத

சபையின் ஆக்க அமைவு

இலங்கை சீனி கம்பெனி தனியார் லிமிடெட் ஆனது அதன் தவிசாளரின் தலைமையில் இயங்கிக் கொண்டிருக்கின்றது இது அரசாங்க கட்டமைப்பு, கொள்கைகள், முன்னேற்றங்கள், போதியளவு காத்திரமாக இடம்பெறுகின்றனவா? பொருத்தமான இயங்காற்று சூழலில் இவை இடம்பெறுகின்றனவா ? என்பதை அர்ப்பணிப்புடன் உறுதி செய்து கொள்கின்றது. இந்த சபையானது தற்சமயம் ஐந்து நிறைவேற்று சாராத பணிப்பாளர்கள் மற்றும் இரண்டு நிறைவேற்று பணிப்பாளர்கள் உள்ளடக்கியதாக இருப்பதுடன் இவற்றுள் தவிசாளர் மற்றும் பணிப்பாளர்.'. பிரதான நிறைவேற்று அதிகாரி அதாவது இலங்கை அரசாங்கத்தின் திறைசேரியினால் நியமிக்கப்பட்ட இந்த இருவரையும் உள்ளடக்கியதாக காணப்படுகின்றது. இலங்கை அரசாங்கத்தின் திறைசேரி செயலாளர் மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் துறை அமைச்சு ஆகியவற்றிற்கு இந்த சபை அறிக்கையிட வேண்டும்.

பணிப்பாளர் சபை, சிரேஸ்ட முகாமைத்துவம் இலங்கை சீனி கம்பெனியின் சகல ஊழியர்களது கடமைகளை நிறைவேற்றுகின்ற பொழுது தமது கடமைகளையும் பொறுப்புகளையும் நிறைவேற்றுகின்ற பொழுது இந்த வரைவு சட்டத்தை பின்பற்ற வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றார்கள். கம்பெனியின் நற்பெயரை தாக்கக் கூடியதாக இவை இருக்கலாம் ஆகவே கம்பெனியின் நலனை கருத்தில் கொண்டும் அதன் பங்கேற்பாளர்களின் நலனை கருத்தில் கொண்டும் பணிப்பாளர்கள் சபையின் தலைமைத்துவத்தின் கீழ் நிறைவேற்ற எதிர்பார்க்கப்படுகின்றனர். அரச தொழில் முயற்சிகள் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட வழிகாட்டிகளுக்கு ஏற்ப பெருநிறுவன ஆளுகை வரைவுச் சட்டத்தை இலங்கை சீனி கம்பெனி ஏற்றுக்கொண்டுள்ளது அத்துடன் ஒழுங்கமைப்பு தேவைப்பாடுகள் மற்றும் தன்னார்வ நெறிமுறைகள் சிறப்பான சந்தையில் நடைமுறைகள் பங்கீட்டுபாட்டாளர்களுக்கு பெறுமானங்களை வெளிப்படைத் தன்மை மிக்க முறையில் வழங்குதல் போன்றவற்றை வழங்குவதை சபை ஏற்றுக் கொண்டுள்ளது. எமது துறையில் சிறப்பு தேர்ச்சிகளை பெற்ற நன் மதிப்புக்குரிய உறுப்பினர்களை சபை தன்னகத்தே கொண்டுள்ளது. இவர்கள் தமது துறையில் பல்நிலை வெளிப்படுத்திய வகைகளாக இருப்பதுடன் பல்வேறு துறைகளைச் சார்ந்த நிபுணர்களை உள்ளடக்கிய சுயாதீன குழுவினால் மேற்கொள்ளப்பட்ட விதப்புரை இன் பிரகாரம் இலங்கை திறைசேரியினால் நியமிக்கப்பட்டுள்ளனர். கம்பெனிக்கான உபாய ரீதியான திட்டம் மற்றும் பிரதான கொள்கைகள் ஆகியவற்றிற்கு ஒப்புதல் அழிப்பதுடன் மற்றும் சபையின் உப குழுக்கள் மற்றும் பிரதான முகாமைத்துவ ஆளணியினர் ஆகியோர் மூலமாக அவை வினைத்திறன் மிக்க முறையில் நடைமுறைப்படுத்த படுகின்றனவா என்பதை மேற்பார்வை செய்கின்றது.

கூட்டிணைவு ஆளுகை

சபைக் கூட்டங்கள்

கம்பெனியின் பெருநிறுவன சார்ந்த சகல விதமான செயல்பாடுகளும் சுமுகமாக நடைபெறுகின்றன என்பதை உறுதிசெய்து கொள்ளும் முகமாக கலந்துரையாடல்களை மேற்கொண்டு உபாய ரீதியான தீர்மானங்களை மேற்கொள்ளும் முகமாக மாதம் ஒருமுறை சபை கூடுகின்றது. உபாய முறைகளை உருவாக்குதல், வியாபார கொள்கைகள், வளர்ச்சியை உறுதிப்படுத்துதல், அத்தகைய முறைகள் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்படுகின்றன போன்ற முக்கியத்துவமான விடயங்கள் உறுதிசெய்து கொள்ளும் முகமாக கணக்குகள் மற்றும் முன்னேற்ற அறிக்கைகள் போன்றவற்றை சபை மீளாய்வு செய்கின்றது. மேலும் பெருநிறுவன திட்டங்கள், வரவு செலவு திட்டம், மூலதனச் செலவு, புதிய முதலீடுகள், முதலீடுகள் தொடர்பான பிரேரணைகளை மீளாய்வு செய்ததன் பின்னர் புதிய வாய்ப்புகள் போன்றவற்றுக்கு சபை ஒப்புதல் அளிக்கின்றது.

கம்பெனி செயலாளர்கள் மற்றும் சுயாதீன தொழில்வாண்மை அறிவுரைகள்

இலங்கை சீனி கம்பெனியின் மற்றும் சிரேஸ்ட முகாமைத்துவ கம்பெனி செயலாளர்கள் மற்றும் பல்வேறுவிதமான வெளிநிலை தொழில்வாண்மை மிக்க அமைப்புகள் ஆகியவற்றிடம் இருந்து அவசியமான சந்தர்ப்பங்களில் சுயாதீன தொழில்வாண்மை அறிவுரைகளை கோரி நிற்கின்றன. கம்பெனியின் பெருநிறுவன உபாய முறைகளுக்கு ஏற்ப தற்போதைய தொழில்நுட்ப சார் தேவைகளை மேம்படுத்தும் முகமாக விவசாயம், தொழில்நுட்பம், மற்றும் நிதி சார்ந்த நிபுணர்கள் ஆகியோருடன் மிகவும் நெருக்கமாக கம்பெனி செயற்பட்டு வருகின்றது.

வியாபார புத்திக்கூர்மை மற்றும் முகாமைத்துவ கூட்டங்கள்

கம்பெனி ஆனது ஒவ்வொரு பிரிவுகளினதும் அன்றாட நடவடிக்கைகள் சுகமாக இடம்பெறுகின்றன என்பதை உறுதிசெய்து கொள்ளும் முகமாக உபாய ரீதியான வியாபார பிரிவு மட்டத்தில் தொழிற்பாடு சார்ந்த கூட்டங்களை வாராந்தம் நடத்தி வருகின்றது. மாதாந்த சபை கூட்டங்களுக்கு மேலதிகமாக கம்பெனியின் தொழிற்பாடுகளை மீளாய்வு செய்து மேற்பார்வை செய்யும் முகமாக இலங்கை சீனி கம்பெனி ஆனது மாதாந்த முகாமைத்துவ கூட்டங்களை நடத்தி வருகின்றது. இத்தகைய முகாமைத்துவ கூட்டங்கள் ஆனது மாதத்தின் மூன்றாவது வாரத்தில் வருகின்ற ஒவ்வொரு வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் முறையே பெலவத்த மற்றும் செவனகலையில் நடத்தி வருகின்றது. இதற்கு தவிசாளர் மற்றும் / அல்லது பணிப்பாளர் அல்லது பிரதான நிறைவேற்று அதிகாரி தலைமை தாங்குகிறார்.சகல பிரிவுத் தலைவர்களும் மற்றும் பிரதேச தலைவர்களும் இக்கூட்டங்களில் பங்குபற்றுகின்றன இவர்கள் தமது கடந்த மாத செயலாற்றுகை பற்றிய விபரங்களை சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றனர். அத்தோடு அவர்கள் எதிர்கொண்ட சவால்கள் மற்றும் மேற்கொண்ட உபாயமுறைகள் பற்றி கலந்தாலோசிக்கப்படுவதுடன் குறிப்பிட்ட மாத காலத்தின் பொழுது எதிர்பார்க்கப்பட்ட விளைவுகளை அடைவதற்கான வழிமுறை பற்றி ஆராயப்படுகின்றது.

கணக்காய்வு குழு மற்றும் உள்ளக கணக்காய்வு செயற்பாடுகள்

பெருநிறுவன இலக்குகள் மற்றும் நோக்கங்கள் ஆகியன எல்லா சந்தர்ப்பங்களிலும் அடைய படுகின்றனவா என்பதை உறுதிசெய்து கொள்வதற்காக கம்பெனி ஆனது தனது தொழிற்பாடுகளின் பொழுது தனது வெளிப்படைத்தன்மை, ஒருமைப்பாடு ஆகியன பின்பற்றப்படுகின்றனவா என்பதை உறுதி செய்து கொள்ளும் முகமாக அதன் உள்ளக கட்டுப்பாட்டு முறைகளை எல்லா சந்தர்ப்பங்களிலும் இலங்கை சீனி கம்பெனி மீளாய்வு செய்து வருகின்றது. பெரு நிறுவன ஆளுகை பெறுமதியை இலங்கை சீனி கம்பெனி அங்கீகரிப்பது உடன் இடர்களை சமாளிப்பதற்கு உரிய வாய்ப்புகள் வழங்கப்படுகின்றன. நிலைபேறான வியாபாரத்தை உறுதிப்படுத்துகின்ற அதேவேளை சகல பங்கீட்டுப்பாட்டாளர்களுக்கும் உரிய பெறுமதிகள் சேர்க்கப்படுகின்றன என்பதை இலங்கை சீனி கம்பெனி உறுதி செய்து கொள்கின்றது. பல்துறை சார்ந்த தொழிற்தேர்ச்சிகளைக் கொண்ட 3 நிறைவேற்று சாராத பணிப்பாளர்களை தன்னகத்தே கொண்ட இயங்காற்று தன்மைகொண்ட கணக்காய்வு குழுவினால் பெருநிறுவன ஆளுகை சார்ந்த சிறப்பான நடைமுறைகள் அர்ப்பணிப்புடன் பின்பற்றப்படுகின்றன என்பதை நாம் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றோம்.

நிதி ரீதியான அறிக்கையிடல

அரசாங்கத்திற்கு சொந்தமான நிறுவனங்கள் அது சட்ட ரீதியான தேவைப்பாடு ஏற்படுகின்ற முறையில் அதன் வருடாந்த அறிக்கைகளை அதாவது தனது வருடாந்த அறிக்கையை இலங்கை சீனி கம்பெனி உரிய நேரத்தில் சமர்ப்பிப்பதற்கான பரிசீலனைகளை அதன் பணிப்பாளர் சபை மேற்கொண்டு வருகின்றது. இந்த வருடாந்த அறிக்கையிடல் ஆனது பூரண வருமானம் பற்றிய கூற்று, நிதி நிலை தொடர்பான கூற்று, காசோட்ட கூற்று ஏனைய அவசியமான தொழிற்பாட்டு தகவல்களை உள்ளடக்கிய நிதி ரீதியான கூற்றுக்களை கொண்டதாகும். இந்த நிதி ரீதியான கூற்றுக்கள் ஆனது இலங்கை கணக்கீட்டு தராதரங்கள் மற்றும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கொள்கைகள் ஆகியவற்றிற்கு ஏற்ப தயாரிக்கப்படுகின்றது.

முகாமைத்துவ மீளாய்வு

இடர் வகை	விளக்கம்	செயல்திட்டம்
தொழிற்பாட்டு	கரும்பு பயிர் செய்கைக்கான இடங்களை கண்டறிதல்	கரும்பின் விலையை ரூபாய் 4,500 /- இல் இருந்து 5,000 /- ஆக அதிகரிக்கச் செய்தல் கடன் அடிப்படையில் பயிருக்கான முற்கொடுப்பனவுகள் மற்றும் ஏனைய பொருட்களை வழங்குதல்.. அரசாங்கம் அறிமுகப்படுத்திய உர மானியத்தில் மூலமாக கரும்பு பயிர்கள் செய்கையாளரும் நன்மை அடைதல்.
கடன்சார் இடர்	உள்ளீடுகளின் காரணமாக எழுகின்ற மோசமான கடன்களை விவசாயிகளுக்கு வழங்குதல்.	கடனை அறவிடுவதற்கான பொறுப்புகளை பணியாளர்களுக்கு வழங்குதல்
பணம் வீக்கம் சார்ந்த இடர்	அதிகரித்து வருகின்ற செலவு மற்றும் முக்கியமான உள்ளீடுகள் ஆகியவற்றின் காரணமாக சிலாபத்தில் ஏற்படக்கூடிய தாக்கம்	அதிகரித்து வரும் உற்பத்தி செலவுகள் மற்றும் குறைந்து வரும் உற்பத்திக்கான செலவுகள் பற்றி கவனத்தை செலுத்துதல்
சந்தை சார் இடர்	சீனி வியாபாரிகளின் குறைந்த விலைக்கு வெளிநாட்டில் இருந்து சீனி இறக்குமதி செய்தல்.	இறக்குமதியின் அளவை குறைக்கும் முகமாக உள்ளூர் உற்பத்தியின் அளவை அதிகரித்தல்
சுற்றாடல் சார் இடர்	யானைகள் மற்றும் காலநிலை மாற்றங்கள் காரணமாக ஏற்படுகின்ற பாதிப்புகளின் விளைவாக கரும்பு உற்பத்தி வீழ்ச்சி காணலாம்	கம்பெனியின் செலவில் யானை பாதுகாப்பு தளங்கள், பாதுகாப்பு வேலிகள், மனித தடைகள் போன்றவற்றை நிர்மாணித்தல்.



எமது கலாசாரம் மற்றும் பெறுமதிகள்

எமது விவசாயிகள்

விவசாயிகளே எமது மன்னர். இலங்கை சீனி கம்பெனியின் மிக முக்கியமான பிரதான பங்கீட்டுபாட்டாளர்கள் எமது விவசாயிகள் என கம்பெனி கருதுகின்றது. செவலனகலையை பொருத்தவரையில் இதுவோர் முக்கிய விடயமாகும். ஏனெனில் பயிர் செய்கைக்கென மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே நிலம் காணப்படுகின்றது. ஏனைய காணிகளில் விவசாயிகள் பயிர் செய்து வருகின்றனர்.

ஒரு எக்டேயர் நிலப்பரப்பில் கரும்பு பயிர் செய்வதன் மூலம் கிடைக்கக்கூடிய சராசரி வருமானம் ரூபாய் 35,000/- மாதாந்தம் என மதிப்பிடப்பட்டுள்ளது. பல பிரதேசங்களில் விவசாயிகள் கரும்பு பயிர் செய்கையில் ஈடுபட்டுள்ளனர். இவர்களுக்கு குறைவான வருமானமே கிடைக்கிறது. இதன் காரணமாக இத்தொழில் தொழிற்துறையில் ஈடுபடுவதற்கு விவசாயிகள் பெரும்பாலும் விரும்புவதில்லை. அவர்கள் ஏனைய பயிர் செய்கைகளளை மேற்கொள்ள விரும்புகின்றனர். ஆரம்பத்திலேயே இந்நிலைமையை இலங்கை சீனி கூட்டுத்தாபனம் இனம் கண்டது. எனவே விவசாயிகளின் வருமானத்தை அதிகரிப்பதற்காக பல்வேறு விதமான முன்னெடுப்புகளை மேற்கொண்டோம். தற்சமயம் விவசாயி ஒருவருக்கு ஒரு மெட்ரிக் தொன் கரும்பிற்கு 5,000/- ரூபாய் வழங்கப்படுகிறது. ஏற்கனவே ஒரு மெட்ரிக் டன் கரும்பிற்கு 4,500/- ரூபாய் வழங்கப்பட்டது. இலங்கை கரும்பு உற்பத்தி வரலாற்றில் ஒரு மெட்ரிக் டன் கரும்புக்கு அதிகூடிய விலையை வழங்கிய நிறுவனம் இலங்கை சீனி கம்பெனி ஆகும். விவசாயிகளை உற்சாகப்படுத்தும் முகமாக 2013 ஆம் ஆண்டில் தனது இலாபத்தின் 10% வீதத்தை விவசாயிகளுக்கான ஊக்குவிப்பாக வழங்குவதற்கு முகாமைத்துவம் தீர்மானித்தது.

எமது வாடிக்கையாளர்கள்

எமது வாடிக்கையாளர்களே எமது எதிர்பார்ப்பாகும். எமது சனத்தொகையின் 20 மில்லியன் மக்கள் எமது வாடிக்கையாளர்களாகும். எமது பிரதான நோக்கம் தரமான சீனியை நியாயபூர்வமான விலையில் அவர்களுக்கு வழங்குவதாகும். சராசரியாக வருடம் ஒன்றுக்கு இலங்கையர் ஒருவர் சுமார் 30 முதல் 35 கிலோ கிராம் வரையான சீனியை நுகர்கின்றனர். எமது உற்பத்தியானது 6% வீதமாக காணப்படுவதன் காரணமாக எஞ்சிய 94% வீதம் அளவான சீனி இறக்குமதி செய்யப்படுகின்றது. சீனியை உற்பத்தி செய்வதற்காக வருடாந்தம் யுஎஸ் டொலர் 250 மில்லியனுக்கும் அதிகமான தொகை செலவிடப்படுகின்றது. இது எமது தேசிய வருமானத்தில் எதிர்மறையான தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது.

சிறந்த ஆளகை

கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களமே என்பது சட்டபூர்வமான கணக்காய்வாளர்கள் ஆவர். வெளி நிலை கணக்காய்வாளர்களுக்கு மேலதிகமாக பெலவத்த மற்றும் செவனகல பிரிவுகளில் உள்ள கணக்காய்வு திணைக்களங்கள் காணப்படுகின்றன. இவை நேரடியாக பிரதான நிறைவேற்று அதிகாரி மற்றும் தவிசாளர் ஆகியோருக்கு அறிக்கைகளை சமர்ப்பிக்கின்றன. கணக்காய்வு குழுவானது மூன்று சபை உறுப்பினர்களை கொண்டதாகும். இவை முறையாக உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் மீளாய்வு செய்வதுடன் சிரேஸ்ட முகாமையாளர்கள் இடம் இருந்து சம்பந்தப்பட்ட விளக்கங்களை கோரி அவற்றை அந்த அறிக்கைகளை தமது கண்டறிதல்களுடன் பணிப்பாளர்கள் சபைக்கு சமர்ப்பிக்கிறது.

கட்டுப்பாடுகள்

இதுவரை தீர்க்க வேண்டிய பிரச்சினைகளாக இவை காணப்படுகின்றன. இதன் அடிப்படையில் எதிர்காலம் தொடர்பில் தொடர்ச்சியாக அக்கறைகளை செலுத்த முடியும்

பெலவத்த மற்றும் செவனகல ஆகிய இடங்களில் அசையக் கூடிய சொத்துக்கள் காணப்படுகின்றன. இருப்பினும் இவை கம்பெனிக்கு சொந்தமானது அல்ல. இவைத் தொடர்பான சட்ட ரீதியான பிரச்சினைகள் தீர்க்கப்படும் வரை நாம் காத்திருக்கின்றோம். அதன் மூலம் அவற்றை அகற்றலாம் அல்லது கம்பெனிக்கு உள்வாங்க முடியும்.

காணியை கையகப்படுத்தும் விடயங்கள் மிக மெதுவாகவே நடைபெற்று வருகின்றன. இதன் அடிப்படையில் எமது மத்தியகால மற்றும் நீண்டகால திட்டங்களை இடைநிறுத்தி வைக்க வேண்டிய நிர்பந்தம் காணப்படுகின்றது. போதியளவு காணி கையகப்படுத்தப்படும் வரை இவற்றை ஒத்திவைக்க வேண்டிய நிர்பந்தம் உள்ளது. இது எமது முகாமைத்துவத்தின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட விடயமாகும்
இலங்கை அரசாங்கத்தினால் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை அடைவதற்கான உபாய முறைகளை ஏற்கனவே முகாமைத்துவம் வகுத்துள்ளது. புதிய முதலீடுகளுக்கான நிதியை திரட்டுவது மற்றும் ஒரு பிரச்சினையாகும். பல்வேறு வங்கிகள் நிலத்தின் உரிமை பற்றிய விடயங்களை கோரி நிற்கின்றன. இருப்பினும் அவற்றுக்கான உரிமை நிலங்கள் அதாவது பெலவத்த மற்றும் செவனகலையில் உள்ள பெரும்பாலான நிலங்கள் சீனி கம்பெனிக்கு உரியதல்ல. இருப்பினும் அமைச்சுடனும் திறைசேரியுடனும் உதவியை பெற்று நிதியை ஏற்பாடு செய்வதற்கான செயன்முறைகளில் நாம் ஈடுபட்டுள்ளோம்.

பெலவத்தையில் உள்ள தகவல் தொழில்நுட்ப முறையில் வரலாற்றுரீதியான தகவல்களும் தற்போதைய தொழில் ரீதியான தகவல்களும் காணப்படுகின்றன. ஆனால் செவனகலையை பொருத்தவரையில் முகாமைத்துவம் ஆனது ஊழியர்கள் பற்றிய சகல தகவல்களையும் தன்னுடன் எடுத்துச் சென்று விட்டது. ஆகவே ஊழியர்களுக்கான பணிக்கொடை ஏற்பாடுகள் மற்றும் ஊழியர்கள் தொடர்பான ஏனைய தகவல்கள் தற்போது இல்லை.செவனகல சீனி கம்பெனியின் முன்னாள் முகாமைத்துவத்திடம் இருந்து அவசியமான புத்தகங்களையும் பதிவுகளையும் பெற்றுக் கொள்வதற்கான முன்னெடுப்புக்களை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும்

வரையறுக்கப்பட்ட இலங்கை சீனி (தனியார்) கம்பனி

ஆண்டறிக்கை – 2017

கணக்காய்வுக் குழு அறிக்கை

கம்பெனியின் கணக்காய்வு குழு உறுப்பினர்கள் சபையினால் நியமிக்கப்படுகின்றனர். இந்த கணக்காய்வு குழுவானது மூன்று நிறைவேற்று அதிகாரம் சாராத பணிப்பாளர்களை கொண்டுள்ளது. கணக்காய்வு குழு கூட்டங்கள் ஆனது அவசியத்தை கருத்திற்கொண்டு கணக்காய்வு குழு தவிசாளரின் கீழ் நடைபெறுகின்றது.

இவரை சேரியையும் பிரதிநிதித்துவம் செய்கின்ற சபை உறுப்பினராகும். தவிசாளர், பணிப்பாளர்.'. பிரதான நிறைவேற்று அதிகாரி, பிரதான தொழிற்பாட்டு அதிகாரிகள், சிரே'ட முகாமையாளர்கள், ஆகியோர் அழைப்பின் பேரில் இந்த கூட்டங்களில் பங்கு பற்றுகின்றனர். இந்தக் கூட்டங்களை மனித தொடர்புகள் மற்றும் நிர்வாகத்திற்கான பொது முகாமையாளர் ஒருங்கிணைக்கிறார்.

பின்வரும் சபை உறுப்பினர்கள் கணக்காய்வு குழுவிற்கு 2015 ஏப்ரல் 28 இருந்து செல்லுபடியாகும் விதத்தில் நியமிக்கப்பட்டனர்.2015 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இரண்டு முறை இவர்கள் சந்தித்தனர். அவர்களது வருகை பற்றிய விபரம் பின்வருமாறு:

பெயர்	வரவு
திரு டிவி வீரசேன- தவிசாளர் மேலதிக பணிப்பாளர் நாயகம் இலங்கை திரைசேரி நிறைவேற்று சாராத பணிப்பாளர் - LSCPL)	06/06
திரு.யு.பி.பி.கவிகேசவ- உறுப்பினர் (நிறைவேற்று சாராத பணிப்பாளர் - LSCPL)	06/06
திரு.ஏ.சி. கீர்த்திரத்தின - உறுப்பினர் நிறைவேற்று சாராத பணிப்பாளர் - LSCPL)	06/06

கணக்காய்வு குழுவின் பிரதான வகிபாகம் மற்றும் பொறுப்புகள்

இலங்கை கணக்கீட்டு தராதரங்களுக்கு ஏற்ற கம்பெனியின் நிதிக் கூற்றுகளை தயாரித்தல், சமர்ப்பித்தல், போதியளவு வெளிப்படுத்தல்களை மேற்கொள்ளல் உள்ளடங்களாக கம்பெனி நிதிக்கூற்றுக்கள் மற்றும் நிதி ரீதியான அறிக்கையிடல் செயற்பாடுகள் ஆகியவற்றின் தன்மை மற்றும் நேர்மை தொடர்பான மேற்பார்வை பொறுப்புகளை நிறைவேற்றுதல்.

கம்பெனியின் உள்ளக கட்டுப்பாடு மற்றும் இடர் முகாமைத்துவம் ஆகியன சுற்றுநிருபங்கள் மற்றும் அவ்வப்போது திறைசேரியின் ஆல் வழங்கப்பட்ட வழிகாட்டிகள் மற்றும் சுற்றுநிருபங்கள் ஆகியவற்றிற்கு ஏற்ப இணங்கி இருக்கின்றனவா என்பதை உறுதிப்படுத்துவதற்காக தமக்கான பொறுப்புகளை நிறைவேற்றுதல்.

நிதியாண்டில் பொழுதான முன்னேற்றம

கணக்காய்வு குழுவின் நடவடிக்கைகள் ஒப்புதல்களுக்காகவும் நடைமுறை படுத்தலுக்காகவும் முறையாக பணிப்பாளர்கள் சபையிடம் சமர்ப்பிக்கப்படுகின்றன. கணக்காய்வின் நோக்கேல்லை அதன் நோக்கம் மற்றும் பயனுறுதி தன்மையை ஆகியவற்றை கணக்காய்வு குழு மேற்பார்வை செய்து மீளாய்வு செய்கிறது. இந்தக் குழுவானது சீனி கம்பெனியின் தொழிற்பாடுகள் உடன் அதன் எதிர்கால சுபீட்சத்தையும் மீள் ஆய்வு செய்கின்றது..

எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு பதிலளித்த விடயங்கள் தொடர்பில் முகாமைத்துவத்தின் ஆள் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் உள்ளக கட்டுப்பாடுகளின் பயனுறுதி தன்மை ஆகியன பற்றி வியாபார பிரிவுகளின் தலைவர்கள்.'. அத்தியகச்சர்கள் ஆகியோருடன் கலந்துரையாடப்பட்டு சீர்செய்தல் நடவடிக்கைகள் பரிந்துரைக்கப்படுகின்றன.

2015 டிசம்பர் 31 உடன் முடிவடைந்த வருடத்திற்கான இலங்கை சீனி கம்பெனியின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை மற்றும் முகாமைத்துவத்தில் பதிலளிப்புகள் ஆகியன முகாமைத்துவத்துடன் கலந்துரையாடப்பட்டதுடன் கணக்காய்வாளர்களினால் எடுத்துரைக்கப்பட்ட பிழைகளை சீர் செய்வது தொடர்பான வழிமுறைகளையும் அவர்கள் குறிப்பிட்டனர். உள்ளக கட்டுப்பாட்டில் காணப்பட்ட குறைபாடுகள் மற்றும் உள்ளக கணக்காய்வு குழுவினால் இனங்காணப்பட்ட இரண்டு வியாபார பிரிவுகளின் பிழைகள் ஆகியன பிரதான நிறைவேற்று அதிகாரி மற்றும் ஒருங்கிணைப்பாளர் உடன் கலந்துரையாடப்பட்டது. முக்கியமான விடயங்கள் தொடர்பில் குறிப்பிடப்பட்டதுடன் எடுக்க வேண்டிய பொருத்தமான நடவடிக்கைகள் பற்றிய விதப்புரைகளும் பணிப்பாளர்கள் சபைக்கு வழங்கப்பட்டது.

உள்ளக கணக்காய்வு பிரிவினர் வழங்கிய சேவைகளுக்காகவும் கம்பெனியின் தேவைகளையும் எதிர்பார்ப்புகளையும் நிறைவேற்றுவதற்காக அவர்கள் ஆற்றிய பணிக்காகவும் கணக்காய்வு குழு அவர்களுக்கு தனது உளமார்ந்த நன்றியை தெரிவிக்கின்றது. குழு உறுப்பினர்கள் வழங்கிய பங்களிப்புக்காக அவர்களுக்கும் நன்றி தெரிவிக்கப்படுகின்றது. நிதி விடயங்கள் தொடர்பில் அவர்களது தேர்ச்சி மற்றும் துறை சார்ந்த அனுபவம் ஆகியன மிகப் பெறுமதி மிக்கதாகும். கம்பெனியின் தொடர்ச்சியான வெற்றிக்கு இவை அவசியம்.

டிவி வீரசேன

தவிசாளர் -கணக்காய்வு குழு


HV
0778

சிரேஸ்ட முகாமைத்துவ அணி



தவிசாளர்
நவீன் அதிகரம



பணிப்பாளர் /பிரதான நிறைவேற்று அதிகாரி
ஆ.ளு.ஆ. பவுசர்



பதில் பிரதான தொழிற்பாட்டு அதிகாரி
டி.எல்.ஜி. ஜயந்த



(பிரதான தொழிற்பாடுகள் அதிகாரி)
கே .டபிள்யூ. வை. ஜெயதிலக




பொது முகாமையாளர் (நிதி)
N.H.S. நவரத்தின



பிரதி பொது முகாமையாளர்
(விற்பனை/விற்பனைப்படுத்தல்)
S.J. சேனானாயக

வரையறுக்கப்பட்ட இலங்கை சீனி (தனியார்) கம்பனி

ஆண்டறிக்கை - 2017



முகாமைத்துவம் அணி - பெலவத்த



அமர்ந்திருப்போர் இடமிருந்து வலமாக


திரு. ஜயதுங்க பண்டார - உற்பத்தி முகாமையாளர் (வடிசாலைகள்), திருமதி.லிலி. எம். ஹெட்டிஆரச்சி (நிறைவேற்று அதிகாரி - பெருநிறுவன தகவல்கள்), திரு. வி.ஜி.டி. பிரசங்க - (பிரதி பொது முகாமையாளர் - மனிதவளம்) திரு டி.எம்.எஸ். பண்டார - பிரதி பொது முகாமையாளர் (விவசாயம்), திரு. டி.எல்.ஜி. ஜயந்த - பதில் பிரதான தொழிற்பாட்டு அதிகாரி/பொது முகாமையாளர் உற்பத்தி) திரு ஆர்.எம். டபிள்யூ. ஹேமகுமார - பிரதி பொது முகாமையாளர் (தொழிற்சாலை), திரு. ஆனந்த திசாநாயக்க (நிதி கணக்காய்வாளர்), திரு. இந்திக்க கடுகஹ - உற்பத்தி முகாமையாளர் (தொழிற்சாலை)

நின்றிருப்போர் - இடமிருந்து வலம் முதலாவது வரிசை

திரு. சந்தன புஷ்பகுமார- முகாமையாளர் (கொள்வனவு), திரு. ஜே.பி.டி.பி. பிரஞ்ஞாசீல - முகாமையாளர் (அறுவடை கொள்வனவு மற்றும் பொருட்களை ஏற்றுதல்), திரு. டி.எம்.டி. தென்னக்கோன் - முகாமையாளர் (பாதுகாப்பு), திரு ஜெ.ஏ.ஏ.ஏ.என். குமார - முகாமையாளர் (செட்ல தோட்டம்), திரு. சுபுன் குமாரசிறி - மின் பொறியியலாளர், திரு. சமிந்த கோட்டகே - முகாமைத்துவ கணக்காளர், திரு. ஆர்.எம்.என். கருணாரத்ன - உதவி முகாமையாளர் (தோட்ட பாதுகாப்பு) திரு. கே.பி. விதுரசிங்க - பயிர் கணக்காய்வாளர், திரு. சரிந்த பெரேரா- புலனாய்வு அதிகாரி

நின்றிருப்போர் - இடமிருந்து வலமாக இரண்டாவது வரிசை

திரு. மகேஷ் சந்தன - விவசாய நிபுணர், திரு. எம்.பி. சந்தன - பிரதான பொருளியலாளர் (விவசாய செயலமர்வு) , திரு. அனுர விஜயசிங்க - முகாமையாளர் (களஞ்சியசாலை). திரு டபிள்யு.எஸ்.கே. ரத்னாயக்க - முகாமையாளர் (காணி அபிவிருத்தி), திரு. கே.எம்.கே.கே. பண்டார - முகாமையாளர் (தகவல் தொழில்நுட்பம்), திரு. எல்.ஏ.சி. பிரசன்ன - முகாமையாளர் (நக்கல்ஸ் தோட்டம்), திரு. எம்.எம்.ஏ. பண்டார - பொருளியல் முகாமையாளர், திரு .அனுருத்த மாசாட்சி- பிரதம உள்ளக கணக்காய்வாளர்.


நிறுவனத்தின் கட்டமைப்பு

முகாமைத்துவக் குழு – செவனகல



அமர்ந்திருப்போர் இடமிருந்து வலமாக திரு. எஸ். ஏ. கே. கமலசேன (பதில் பிரதி பொது முகாமையாளர்) பொருளியலாளர் டி .கே. டபிள்யு .டி சில்வா (பிரதி பொது முகாமையாளர் - தொழிற்சாலை) பொருளியலாளர் கே. ஏ .வோல்ட்டர் (பொது முகாமையாளர்) பிரேகிடிய கே .டபிள்யூ. வை. ஜெயதிலக (பிரதான தொழிற்பாடுகள் அதிகாரி) திரு .எம். எஸ் .எஸ். சமரவீர (பிரதி பொது முகாமையாளர் - விவசாயம்) திரு. கே. சி. பதிரன (முகாமையாளர் நிதி)

நிற்பவர்கள் இடமிருந்து வலமாக திரு. டபிள்யூ.ஏ. லயனல் விக்ரம.ஆரச்சி (முகாமையாளர் போக்குவரத்து) திரு. எச்.எஸ்பி.பீ. பிஹில்லகெதர (முகாமையாளர்- கொள்வனவு மற்றும் சந்தைப்படுத்தல்) திரு .எம். உபுல் குமார (முகாமையாளர்- விவசாய விரிவாக்கம்) திரு. அத்துல சிறிதேவ (முகாமையாளர்- விவசாய விரிவாக்கம்) பொருளியலாளர் டி.சி. ஹெட்டியாரச்சி (பிரதான பொருளியலாளர் மின்வலு மற்றும் செயலமர்வுகள்) பொருளியலாளர் எஸ்.வி.டி.எஸ். பிரியந்த (பிரதான பொருளியலாளர்) திரு என்.ஏ. விமலரத்ன - (பதில் முகாமையாளர் - உபகரணம்) திரு. பி.ஏ.கே. நந்ததேவ ((முகாமையாளர் விவசாய விரிவாக்கம்) திரு.எஸ்.கொடிதுவக்கு (முகாமையாளர் விவசாய விரிவாக்கம்)



தேசிய கணக்காய்வு அலுவலகம

தவிசாளர்,

இலங்கை சீனி கம்பனி தனியார் லிமிடெட்

2017 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான இலங்கை சீனி கம்பனி தனியார் லிமிடெட்டின் நிதி கூற்றுகள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

2017 டிசம்பர் 31 உள்ள நிதிநிலைமை கூற்றுகள் மற்றும் இலாபம் அல்லது நட்டம் பற்றிய கூற்றுகள் மற்றும் ஏனைய பூரணத்துவம் மிக்க வருமானம், உரிமையாண்மையில் ஏற்பட்ட மாற்றம் மற்றும் வருடத்திற்கான காசோட்டக் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீடுகள் தொடர்பான சுருக்கம் மற்றும் ஏனைய விளக்க தகவல்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய 2017 டிசம்பர் 31 உடன் முடிவடைந்த வருடத்திற்கான இலங்கை சீனி கம்பனி லிமிடெட்டின் நிதிக் கூற்றுக்களில் கணக்காய்வானது இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் 154 ஒன்றாம் உறுப்புரை ஏற்பாடுகளுக்கு ஏற்ப என்னால் மேற்கொள்ளப்பட்டது.

நிதி கூற்றுகளுக்கான சபையின் பொறுப்பு

இலங்கை கணக்கீட்டு தராதரங்களுக்கு ஏற்ப இந்த நிதி கூற்றுகளை நேர்மையாக தயாரித்து அவற்றை சமர்ப்பிப்பதற்கு பணிப்பாளர்கள் சபை பொறுப்பாக இருக்கின்றது. அத்தகைய உள்ளக கட்டுப்பாடுகளை பொருள்சார்ந்த இத்தகைய பிழையான குறிப்புகளோ அல்லது மோசடிகளை அல்லது தவறுகளோ இடம்பெறாமல் தயாரிப்பது அவசியம் என சபை தீர்மானித்தது.

கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்கு ஆய்வினை அடிப்படையாகக்கொண்டு இந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் எனது கருத்தை வெளிப்படுத்துவது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்கீட்டு தராதரங்களுக்கு ஏற்ப எனது கணக்கு ஆய்வினை நான் மேற்கொண்டேன். ஆதாரங்களின் அடிப்படையில் ஒழுக்க நெறி சார்ந்த தேவைப்பாடுகள் மற்றும் திட்டங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் ஆய்வினை மேற்கொண்டு இத்தகைய நிதிக்கூற்றுக்கள் ஆனது எவ்விதமான பொருள் சார்ந்த பிழையான கூறுகளையும் உள்ளடக்கி இருக்கவில்லை என்பதை நியாய பூர்வமாக உறுதிப்படுத்துவது எனது தேவைப்பாடாகும்.

நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்த பட்டுள்ள தொகைகள் மற்றும் ஏனைய விடயங்கள் பற்றிய கணக்காய்வு ரீதியான சான்றுகளை பெற்றுக் கொள்கின்ற விடயங்களில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. இத்தகைய செயன்முறைகள் ஆனது கணக்காய்வாளரின் தீர்மானத்தின் பிரகாரம் அமைகின்றது. இவற்றுள் நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள் பற்றிய தவறான கூற்றுகள் பற்றிய மதிப்பீடுகள் உள்ளடங்குகின்றன, இவை மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்பட்டிருக்கலாம். இத்தகைய இடர் சார்ந்த மதிப்பீடுகளை மேற்கொள்கின்ற பொழுது இவற்றை தயாரித்தல் மற்றும் நிதி கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் நேர்மை தன்மை ஆகியவை பற்றிய உள்ளக கட்டுப்பாட்டு சார்ந்த விடயங்களை கணக்காய்வாளர் பரிசீலிக்கின்றார். இவை இவை சூழ்நிலைக்குப் பொருத்தமானவைகளாக காணப்படுகின்றனவா என்பதை பரிசீலிப்பதுடன் கம்பெனியின் கட்டுப்பாட்டின் பயன்

உறுதித்தன்மை சார்ந்த தனது கருத்துக்களை வெளிப்படுத்துவதன் நோக்கத்திற்காக இவற்றை மேற்கொள்வதில்லை. பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தப்பாடு மற்றும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை அதாவது சபையினால் மேற்கொள்ளப்பட்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மை மற்றும் நிதிக் கூற்றுக்களில் ஒட்டுமொத்த சமர்ப்பித்து மதிப்பீடுகள் ஆகியவற்றை மேற்கொள்கின்றன.

நான் பெற்றுக்கொண்ட கணக்காய்வு சான்றுகள் எனது கணக்கு ஆய்வு தொடர்பான அபிப்ராயத்தை வழங்குவதற்கு போதிய அளவு பொருத்தமானதாக உள்ளதாக நான் நம்புகின்றேன்.

தகைமை சார் அபிப்பிராயத்திற்கான அடிப்படைகள்

அ) ரூபா 1,425,160,007 செலவிற்கு பெரறுமதி இடப்பட்ட முழுமையான தேய்மானம் அடைந்த சொத்துக்கள் பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் ஆகியன கம்பெனியின் ஆள் தொடர்ச்சியாக பயன்படுத்தப்பட்டன. அத்தகைய சொத்துக்கள் தொடர்பான பொருளாதார பயன்பாடு தொடர்பான மீள் மதிப்பீடுகளை மேற்கொண்டு அதன் பிரகாரம் தேவையான சீர்செய்தல் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை.

ஆ) 2017 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி சட்டத்தின் பிரகாரம் பிற்போடப்பட்ட வரி, சொத்துக்கள், பொறுப்புகள் ஆகியவற்றை தணிக்கையில் இலங்கை கணக்கீட்டு தராதரத்தின் 12 ஆம் இலக்கத்தின் 46 மற்றும் 47 பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கணக்கீட்டு காலப் பகுதியின் இறுதியில் விதிக்கப்பட்ட வரி வீதத்தினை கம்பெனி பயன்படுத்த வேண்டும். இருப்பினும் ஏற்புடைய வழி வீதமான 28 வீதத்தை பிரயோகிப்பதற்கு பதிலாக கம்பெனி ஆனது 12 வித வரியையே பிரயோகித்து இருந்தது. இதன் காரணமாக மீள் ஆய்வுக்கு உட்பட்ட காலப்பகுதிக்கான பிற்போடப்பட்ட வரி செலவாக ரூபா 295,600,375 குறைவாக குறிப்பிடப்பட்டிருந்தது.

இ) வியாபாரம் மற்றும் ஏனைய பெறுகைளான 1,184,931 ரூபா 2014 ஆம் ஆண்டு முதல் அறவிடப்படாமல் காணப்பட்டது. இவற்றை அறவிடுவதற்கு உரிய நடவடிக்கைகள் கம்பெனியினால் மேற்கொள்ளப்படவில்லை.

ஈ) கம்பனியின் விநியோகத்தர்கள் மற்றும் சேவைகளை வழங்கியோருக்காக செலுத்தப்பட்ட முறையே ரூபா 3,379,359 மற்றும் ரூபா 1,037,081 ஆகியன 2013 ஆம் ஆண்டு முதல் அறவிடப்படாமல் காணப்பட்டன. அவற்றை அறவிடுவதற்காக முறையான நடவடிக்கைகள் கம்பனியில் மேற்கொள்ளப்படவில்லை.

உ) ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியன தொடர்பில் முறையே செலுத்தப்பட வேண்டிய மேலதிக கட்டணம் ஆனது 2011 ஆம் ஆண்டுமுதல் தீர்க்கப்படாமல் காணப்பட்டது.

ஊ) பெலவத்த சீனி கம்பெனியினால் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட கடன் தொகையான 592,468,478 ரூபா 1987 ஆம் ஆண்டு முதல் அறவிடப்படாமல் காணப்பட்டது. இருப்பினும் இந்த தொகையை அறவிடுவதற்கான நடவடிக்கைகள் கம்பெனியினால் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை. செவனகல சீனி கம்பெனியினியினால் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட கடன் தொகையான 45,689,091 ரூபா 2 முதல் 6 வருடங்களாக அறவிடப்படாமல் காணப்பட்டன. இருப்பினும் அத்தகைய நிலுவைத்தொகை அறவிடுவதற்காக இத்தகைய பின்னூட்டல் நடவடிக்கைகளும் கம்பனியினால் மேற்கொள்ளப்படவில்லை.

வரையறுக்கப்பட்ட இலங்கை சீனி (தனியார்) கம்பனி
ஆண்டறிக்கை - 2017

தகைமை அபிப்பிராயம்

எனது அபிப்பிராயத்தின் படி, தகைமை அபிப்ராயம் தொடர்பான பந்திகளில் தெளிவுபடுத்தப்பட்டுள்ள விடயங்களை தவிர ஏனைய கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் 2017 டிசம்பர் 31 -இல் கம்பனியின் நிதி நிலைமை தொடர்பான உண்மையான நேர்மையான நிலையை எடுத்துக் காட்டுகின்றன. மற்றும் நிதி ரீதியான செயலாற்றுகைகள் மற்றும் குறிப்பிட்ட வருடத்துடன் முடிவடைந்த காசோட்டங்கள் ஆகியன இலங்கை கணக்கீட்டு தராதரங்களுக்கு ஏற்ற காணப்படுகின்றன.

ஏனைய சட்டரீதியான மற்றும் ஒழுங்கமைப்பு தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பெனிகள் சட்டத்தின் 163 (இரண்டாம் பிரிவின்) தேவைபாடுகளுக்கு ஏற்ப நான் பின்வருவனவற்றை குறிப்பிடுகின்றேன்:

அ) கணக்காய்வு தொடர்பான கருத்துக்கள் மற்றும் நோக்கிகெல்லை, மட்டுப்பாடுகள் ஆகியவற்றை அடிப்படைகள் மேலே குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆ) எனது அபிப்பிராயத்தின்படி: - தகைமை அபிப்பிராய பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை தவிர, கணக்காய்விற்கு தேவையான சகல விதமான தகவல்கள் மற்றும் விளக்கங்களை நான் பெற்றுக் கொண்டேன். மற்றும் நான் மேற்கொண்ட ஆய்வுகளின் பிரகாரம் முறையான கணக்கீட்டு பதிவுகள் கம் பனியினால் மேற்கொள்ளப்பட்டு இருந்தது. கம் பனியின் நிதி ரீதியான கூற்றுக்கள் ஆனது 2017 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 151 ஆம் பிரிவு தேவைபாடுகளுக்கு ஏற்ப காணப்படுகின்றன.

பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடல்

அரசியல் அமைப்பின் 154 (ஆறாம் உறுப்புரை ஏற்பாடுகளுக்கு ஏற்ப) எனது அறிக்கையானது எதிர்காலத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

டபிள்யு. பி. சி. விக்ரமரத்ன,

கணக்காய்வாளர் தலைமை அதிபதி.

வரையறுக்கப்பட்ட இலங்கை சீனி (தனியார்) கம்பனியின்
2017 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கான இலாப நட்டம் மற்றும் முழுமையான வருமானக் கூற்று

	குறிப்பு	2017 ரூபா	2016 ரூபா
வருமானம்	4	7,616,939,721	7,728,890,324
விற்பனைக் கிரயம்		(6,102,695,984)	(5,547,832,698)
மொத்த இலாபம்		1,514,243,737	2,181,057,626
ஏனைய வருமானமும், உழைப்பும்	5	47,857,289	70,303,481
நிருவாகச் செலவினம்		(1,259,377,613)	(1,324,448,473)
நிதிசார் செலவினம்	6	(120,545,127)	(72,092,275)
நிதிசார் வருமானம்	6	220,524,878	151,467,371
இலாபத்திற்கு / (நட்டம்) முந்திய வரி	7	402,703,163	1,006,287,730
வருமான வரி செலவினம்	8	(275,043,322)	(177,050,274)
ஆண்டுக்கான இலாபம் / (நட்டம்)		127,659,841	829,237,456
காலப்பகுதிக்குரிய ஏனைய முழுமையான வருமானம், தேறிய வரி		29,830,638	43,835,935
காலப்பகுதிக்குரிய முழுமையான வருமானம் / (நட்டம்) தேறிய வரி		157,490,479	873,073,391
பங்கு ஒன்றுக்கான உழைப்பு (நட்டம்)	9	1,276,598	8,292,375

பக்க இலக்கம் 3•• முதல் 59 வரையுளள் கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புக்கள் இந்த நிதிக் கூற்றுக்களின் ஒரு அம்சமாகும்.

வரையறுக்கப்பட்ட இலங்கை சீனி (தனியார்) கம்பனி
ஆண்டறிக்கை – 2017

வரையறுக்கப்பட்ட இலங்கை சீனி (தனியார்) கம்பனியின்
2017 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கான
நிதி நிலைமைக் கூற்று

சொத்துக்கள்	குறிப்பு	2017 ரூபா.	2016 ரூபா
நடைமுறையல்லா சொத்து			
ஆதனம், பொறி மற்றும் பொருத்தல்கள்	10	2,203,255,444	2,425,649,078
பிற்போடப்பட்ட வரிச் சொத்து	8	-	92,167,028
		2,203,255,444	**2,517,816,106**
நடைமுறை சொத்து			
பொருட் பதிவேடுகள்	11	1,889,639,351	2,308,335,528
உயிரியல் சொத்து	12	577,842,993	483,138,155
வர்த்தக மற்றும் ஏனைய பெறுவனவுகள்	13	121,239,226	137,274,446
முற்பணம் முற்றும் முன் கொடுப்பனவு		47,689,488	55,328,859
விவசாயிகளின் கடன் நிலுவை	14	834,376,028	849,260,043
சம்பந்தப்பட்ட ஆட்களின் நிலுவைத் தொகைகள்	25.2	19,168,293	19,168,293
முதலீடுகள்	15	1,461,238,692	1,327,464,946
காசும், காசுக்கு சமமானவைகளும்	21	250,426,762	29,520,476
		5,201,620,834	5,209,490,746
மொத்த சொத்து		**7,404,876,277**	**7,727,306,852**
உரிமையாண்மையும், பொறுப்பும்			
மூலதனம் மற்றும் ஒதுக்கீடுகள்			
அரச மூலதனம்	16	1,000	1,000
அரச கொடை	17	4,047,990,194	4,047,943,334
திட்டிய இலாபம்		997,226,537	750,427,480
மொத்த உரிமையாண்மை		**5,045,217,729**	**4,798,371,814**
நடைமுறையல்லா பொறுப்பு			
பிற்போடப்பட்ட வரிப் பொறுப்பு	8	128,557,251	-
ஓய்வுப் பயன் பொறுப்பு	19	425,505,136	428,339,414
கடன் மற்றும் பெறுகைகள் மீதான வட்டி	18	102,671,934	102,774,368
		656,734,321	531,113,782
நடைமுறை பொறுப்பு			
கடன் மற்றும் பெறுகைகள் மீதான வட்டி	18	252,814,946	589,950,651
வர்த்தக மற்றும் ஏனைய செலுத்தல்கள்	20	1,288,549,102	1,502,591,653
செலுத்த வேண்டிய வருமான வரி		161,560,180	305,278,952
சம்பந்தப்பட்ட ஆட்களுக்கான் நிலுவைத் தொகைகள்			-
		1,702,924,227	2,397,821,256
மொத்த உரிமையாண்மையும், பொறுப்பும்		**7,404,876,277**	**7,727,306,852**

பொது முகாமையாளசள

நிதிக் கூற்றுக்களைத் தயார் செய்து சமர்ப்பிக்கின்ற பொறுப்பு பணிப்பாளர் சபைக்கு உரித்தானது. சபை சார்பாக கைஒப்பமிடப்பட்டது.:

.....
பணிப்பாள

.....
பணிப்பாளர்

.....
பணிப்பாளர்

பக்க இலக்கம் 3•• முதல் •••வரையுளள் கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புக்கள் இந்த நிதிக் கூற்றுக்களின் ஒரு அம்சமாகும்.

திகதி

வரையறுக்கப்பட்ட இலங்கை சீனி (தனியார்) கம்பனி
ஆண்டறிக்கை – 2017

2017 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கான
உரிமையாண்மை மாற்றம் பற்றிய கூற்று

	குறிப்பிட்ட மூலதனம் ரூபா	அரச கொடை ரூபா	திரட்டிய இலாபம் ரூபா	மொத்தம் ரூபா
2016 சனவரி 01 இல் உள்ளவாறு	1,000	4,047,990,194	(122,644,911)	3,925,346,283
அரச கொடையை மீளச் செலுத்தல்	-	-	-	-
பொறி மற்றும் பொறித்தொகுதியை மீள் மதிப்பீடு செய்தல்	-	-	-	-
ஆரம்ப மீதிப் பக்கத்தில் சீராக்கல்		(46,860)	(1000)	(47,860)
பங்கிலாபம் செலுத்தல்	-	-	-	-
ஆண்டுக்கான இலாபம் / (நட்டம்)	-	-	829,237,456	829,237,456
ஏனைய முழுமையான வருமானம்	-	-	43,835,935	43,835,935
மொத்த முழுமையான வருமானம்	-	-	873,073,391	873,073,391
2016 டிசம்பர் 31 இல் உள்ளவாறு	1,000	4,047,943,334	750,427,480	4,798,371,814
வருமான வரி மீளச் செலுத்தியமைக்கான சீராக்கல்	-	-	89,783,484	89,783,484
வருமான வரி மீளச் செலுத்தியமை / பெலவத்த ஐநதொகைக்கான சீராக்கல்	-		(474,906)	(474,906)
Adjustments	-	46,860	-	46,860
ஆண்டுக்கான இலாபம் / (நட்டம்)	-	-	127,659,841	127,659,841
ஏனைய முழுமையான வருமானம்			29,830,638	29,830,638
மொத்த முழுமையான வருமானம்	-	-	157,490,479	157,490,479
2017 டிசம்பர் 31 இல் உள்ளவாறு	1,000	4,047,990,194	997,226,537	5,045,217,731

பக்க இலக்கம் 3•• முதல் 59 வரையுளள் கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புக்கள் இந்த நிதிக் கூற்றுக்களின் ஒரு அம்சமாகும்.

வரையறுக்கப்பட்ட இலங்கை சீனி (தனியார்) கம்பனியின் 2017 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று

செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்	குறிப்பு	2017 ரூபா	2016 ரூபா
வரிக்கு முந்திய இலாபம் / (நட்டம்)		402,703,163	1,006,287,730
சீராக்கல்கள்			
தேய்மானம்	10	352,440,192	321,801,429
ஆதனம், பொறி மற்றும் பொறித்தொகுதி விற்பனைகளின் மூலமான நட்டம்		40,323	100,081
நிதி வருமானம்	6	(220,524,878)	(151,467,371)
நிதிக் கிரயம்	6	120,545,127	71,992,194
ஓய்வூதியப் பயன் பொறுப்புக்கான ஏற்பாடு	19	71,127,492	69,730,649
விவசாயிகளின் கடனுக்கான ஏற்பாடு	11	-	-
அறவிட முடியாக் கடன்		-	-
பொறுப்புக்களை பதிவழிப்புச் செய்தல்		-	-
செயற்படு மூலதன மாற்றத்திற்கு முன்னரான செயற்பாட்டு இலாபம்		726,331,418	1,318,444,712
பொருட் பதிவேடுகளில் (அதிகரிப்பு) /குறைவு		418,696,177	(881,930,605)
வர்த்தக மற்றும் ஏனைய பெற வேண்டியவைகளில் அதிகிப்பு		23,674,591	(52,616,071)
விவசாயிகளிடமிருந்து கிடைக்க வேண்டிய கடன் நிலுவைகளில் குறைவு		14,884,015	(11,373,798)
வர்த்தக மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகளில் அதிகிப்பு		(214,042,552)	413,140,230
செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசுப்பாய்ச்சல்		969,543,648	785,664,469
செலுத்தி வருமான வரி		(108,207,480)	(385,035,428)
செலுத்திய ஓய்வூதியப் பயன் பொறுப்புக்கள்	19	(44,131,131)	(27,123,616)
செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசுப்பாய்ச்சல்		817,205,038	373,505,425
முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்			
ஆதனம், பொறி மற்றும் உபகரணம் கொள்வனவு		(130,086,876)	(147,791,872)
நிலையான வைப்புக்களில் முதலீடு (அதிகரிப்பு) / குறைவு		(133,773,746)	(416,626,646)
உயிரியல் சொத்துக்களில்' முதலீடு		(94,704,838)	141,060,217
ஆதனம், பொறி மற்றும் உபகரணம் விற்பனை மூலம்		-	-
கிடைத்த நிதி வருமானம்	6	220,524,878	151,467,371
முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல்		(138,040,583)	(271,890,930)
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்			
பெற்றுக் கொண்ட நிதிக் கடன் / லீசின்		65,950,000	59,137,600
தீர்க்கப்பட்ட கடன்கள்	18	(21,174,192)	(14,979,472)
முன்னைய உரிமையாளர் சார்பாக மேற்கொண்ட கொடுப்பனவுகள்		-	-
அரச கொடையை மீளச் செலுத்தல்	17	-	-
நிதி லீசின் கடப்பாடுகளின் கீழான பிரதான கொடுப்பனவுகள்	18	(41,954,449)	(40,450,309)
செலுத்திய வட்டி	6	(120,545,127)	(71,992,194)
பங்காலபப் பகிர்வு		-	-
நதிச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல்		(117,723,767)	(68,284,375)
தலைமை அலுவலக ஒதுக்கத்துக்கான சீராக்கல்		(474,906)	(47,860)
காசும், காசுக்கு சமமானவைகளினதும் தேறிய அதிகரிப்பு/(குறைவு)		560,965,782	33,282,260
ஆண்டின் ஆரம்பத்தில் காசும், காசுக்கு சமமானவையும்	21	(500,008,067)	(533,290,327)
ஆண்டின் இறுதியில் காசும், காசுக்கு சமமானவையும்	21	60,957,716	(500,008,067)

பக்க இலக்கம் 37 முதல் •••வரையுளள் கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புக்கள் இந்த நிதிக் கூற்றுக்களின் ஒரு அம்சமாகும்.

லங்கா சீனி கம்பனி (தனியார்) லிமிடெட
2017 டிசம்பர் 30 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டின்
நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

1. பெருநிறுவன தகவல்

1.1 பொதுவானது

லங்கா சீனி கம்பனி தனியார் லிமிடெட் நிறுவனமானது, முழுமையாக கூட்டிணைக்கப்பட்ட ஒரு கம்பனியாகும். இது இலங்கையில் காணப்படுகின்றது. அரசாங்கத்தினால் பொறுப்பளிக்கப்பட்டதன் பின்னர் ஒரு தனியார் லிமிடெட் கம்பனியாக இந்த கம்பனி தாபிக்கப்பட்டது. லங்கா சீனி கம்பனி தனியார் லிமிடெட்டின் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் இலக்கம் 27, மெல்போன் எவனியு, கொழும்பு 04 இல் அமைந்துள்ளது. இதன் வியாபாரங்களை மேற்கொள்கின்ற பிரதான இடங்கள் எம்பிலிபிட்டிய மற்றும் புத்தளயில் அமைந்துள்ளன.

தனியார் லிமிடெட் கம்பெனியாக கூட்டிணைக்கப்பட்டதன் பின்னர் பெலவத்த சீனி கம்பெனி மற்றும் செவனகல சீனி கம்பெனி ஆகியவற்றின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் ஆகியன 2012 ஒக்டோபர் முதலாம் திகதி லங்கா சீனி கம்பெனி தனியார் லிமிடெட்டிற்கு மாற்றப்பட்டன.

1.2 பிரதான செயற்பாடுகள் மற்றும் தொழிற்பாடுகளின் தன்மை

குறிப்பிட்ட நிதியாண்டிற்கான காலப்பகுதியில் இந்தக் கம்பனியின் பிரதான செயற்பாடுகளாக இருப்பது கரும்பு அறுவடை மற்றும் எத்தனோல் ஆகியவற்றை உற்பத்தி செய்து சந்தைப்படுத்துதல் ஆகும்.

1.3 அங்கீகரிக்கப்பட்ட திகதி

2017 டிசம்பர் 31 உடன் முடிவடைந்த வருடத்திற்கான லங்கா சீனி கம்பெனி தனியார் லிமிடெட்டின் நிதிக்கூற்றுக்கள், 2019 மார்ச் 31 இல் பணிப்பாளர்கள் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் விடயத்திற்காக அங்கீகரிக்கப்பட்டன.

2. பொதுவான கொள்கைகள்

2.1 தயார் செய்வதற்கான அடிப்படைகள்

கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் ஆனது நிதி நிலைமை தொடர்பான கூற்று, இலாபம் அல்லது நட்டம் தொடர்பான கூற்று, மற்றும் ஏனைய முழுமையான வருமானம் பற்றிய கூற்று, உரிமையாண்மை கட்டணங்கள் பற்றிய கூற்று, கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான குறிப்புகள் ஆகியவற்றுடன் இணைந்த காசோட்ட கூற்று ஆகியவற்றை உள்ளடக்கியதாக காணப்படுகின்றது.

வேறுவிதமாக குறிப்பிட்டால் அன்றி கம்பெனியின் நிதிக்கூற்றுக்கள் வரலாற்றுக்கிரய அடிப்படையில் தயாரிக்கப்பட்டன.

நிதிக்கூற்றுக்கள்இலங்கை ரூபாயில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

2.1.1 இணக்கம் தொடர்பான கூற்று

லங்கா சீனி கம்பெனி தனியார் லிமிடெட்டின் நிதிக்கூற்றுக்கள், இலங்கை கணக்கீட்டு தராதரங்களுக்கு ஏற்ப தயாரிக்கப்பட்டன. நிதிக்கூற்றுக்களை தயாரித்து அவற்றை சமர்ப்பிப்பதானது 2007 ஆம் ஆண்டு 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்திற்கு ஏற்ப மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2.1.2. நடைபெறும் விதம்

கம்பெனியை எதிர்காலத்தில் தொடர்ச்சியாகக் கொண்டு செல்ல முடியுமா அதற்கான ஆற்றல்கள் காணப்படுகின்றனவா என்பது தொடர்பான மதிப்பீடு ஒன்றினை பணிப்பாளர்கள் சபை மேற்கொண்டதுடன் கம்பெனியை முடிவுறுத்துவதற்கோ அல்லது அதன் செயற்பாடுகளை நிறுத்துவதற்கோ அவர்கள் எதிர்பார்க்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

2.2 முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் தொடர்பான சுருக்கம்

கம்பெனியானது தனது நிதிக்கூற்றுகளை தயார் செய்கையில் பின்வரும் முக்கியத்துவமிக்க கணக்கிட்டு கொள்கைகளை பிரயோகித்தது:

2.2.1 தொழிற்பாட்டு மற்றும் சமர்ப்பண நாணயம்

நிதிக்கூற்றுக்கள் ஆனது இலங்கை ரூபாயில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதேபோல் வர்த்தகரீதியான கொடுக்கல் வாங்கல்களும் இலங்கை ரூபாயிலேயே மேற்கொள்ளப்பட்டன. இத்தொழிற்துறையுடன் சம்பந்தப்பட்ட சூழல்கள் மற்றும் முக்கியமான பொருளாதாரம் சார்ந்த விடயங்கள் ஆகியன இங்கு சிறப்பாக பிரதிபலிக்கப்பட்டுள்ளன.

வெளிநாட்டு நாணயங்களில் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல், வாங்கல்கள் ஆனது குறிப்பிட்ட திகதியில் காணப்பட்ட நாணயமாற்று விகிதத்திற்கு ஏற்ப இலங்கை ரூபாயில் மாற்றி தரப்பட்டுள்ள. வெளிநாட்டு நாணயத்தில் காணப்பட்ட நிதி ரீதியான சொத்துகள் மற்றும் பொறுப்புகள் ஆகியன அறிக்கையிடும் திகதியில் காணப்பட்ட இலங்கை நாணய விகிதத்திற்கு ஏற்ப மாற்றப்பட்டு இலங்கை நாணயத்தில் தரப்பட்டுள்ளன. வெளிநாட்டு நாணயமாற்றங்களினால் ஏற்படுகின்ற வித்தியாசங்கள் ஆனது இலாபம் அல்லது நட்டம் தொடர்பான கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சகலவிதமான வித்தியாசங்களும் இலாபம் அல்லது நட்டம் தொடர்பான கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ளன.

நிதி சாராத சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் ஆகியன வரலாற்று செலவு அடிப்படையில் வெளிநாட்டு நாணய விகிதத்தில் காணப்பட்ட பொழுது அவை கொடுக்கல் வாங்கல் தினத்தில் காணப்பட்ட வெளிநாட்டு நாணய மாற்று வீகிதத்திற்கு ஏற்ப மாற்றப்பட்டுள்ளன. உண்மை பெறுமதியின் அடிப்படையில் அளவிடப்பட்ட நிதி சாராத விடயங்கள் வெளிநாட்டு நாணய விகிதத்தில் காணப்படும் பட்சத்தில் உண்மை பெறுமதி தீர்மானிக்கப்பட்ட தினத்தன்று காணப்பட்ட வெளிநாட்டு நாணய வீதத்திற்கு ஏற்ப மாற்றப்பட்டுள்ளன. நிதி சாராத விடயங்களை மாற்றுவதன் காரணமாக ஏற்படுகின்ற இலாபம் அல்லது நட்டம் ஆனது அக்குறிப்பிட்ட பொருளின் உண்மை பெறுமதியின் மாற்றத்தினால் ஏற்படுகின்ற இலாபம் அல்லது நட்டத்திற்கு ஏற்ப கையாளப்பட்டுள்ளதுடன் உண்மை பெறுமதியின் அடிப்படையில் குறிப்பிடப்பட்டுள்ளன. உதாரணம்: உண்மை பெறுமதி இலாபம் அல்லது நட்டம் ஆனது அதனை மாற்றுவதனால் ஏற்படும் வித்தியாசம் ஏனைய பூரணத்துவம் மிக்க வருமானம் அல்லது நட்ட இழப்பில் அங்கீகரிக்கப்பட்டதுடன் ஏனைய சம்பந்தப்பட்ட இலாபம் அல்லது நட்டம் தொடர்பான பூரணத்துவம் மிக்க வருமானம் அல்லது இலாபம் அல்லது நட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

2.2.2 வருமான அங்கீகாரம்

வருமானத்தினால் கிடைக்கின்ற பொருளாதார ரீதியான நன்மைகள் கம்பெனிக்கு கிடைக்கும் என்பதன் அடிப்படையிலும் இந்த வருமானத்தை நம்பகரமான முறையில் அளவிட முடியும் என்பதை அடிப்படையாகக் கொண்டும் கொடுப்பனவு எப்பொழுது செலுத்தப்பட்டிருந்த பொழுதிலும் அதன் நன்மைகள் கம்பெனிக்கு கிடைக்கும் என்பதன் அடிப்படையில் வருமானம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. வருமானமானது கிடைக்க அல்லது கிடைக்க வேண்டியுள்ள உண்மை பெறுமதிகளின் பரிசீலனையின் அடிப்படையில், வரிகள் மற்றும் தீர்வைகளை தவிர்த்து ஒப்பந்த அடிப்படையில் வரையறை செய்யப்பட்ட கொடுப்பனவுகளை கருத்தில்கொண்டு அளவிடப்பட்டது. இது பிரதான முகவராக செயற்படும் பட்சத்தில் கம்பெனி அல்லது வருமான ஏற்பாடுகளை விசேட வகைகளின் கீழ் மதிப்பிடுகின்றது. கம்பெனியானது தனது சகலவிதமான வருமானம் தொடர்பான ஏற்பாடுகளிலும் முதன்மையாக செயற்படுகின்றது என்பதை முடிவு செய்கின்றது. வருமானம் அங்கீகரிக்கப்படுவதற்கு முன்னர் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விசேட அங்கீகார வழிமுறைகள் நிறைவேற்றப்படல் வேண்டும்.

பொருட்கள் விற்பனை

பொருட்களை விற்பனை செய்வதன் மூலமாக கிடைக்கின்ற வருமானம் ஆனது அத்தகைய பொருட்களின் உரிமையானது விற்பனை மூலமாக அல்லது அது சார்ந்த இடர்கள் விற்பனை மூலமாக அதனைக் கொள்வனவு செய்பவருக்கு மாற்றப்படும் பட்சத்தில் பொருட்களை விற்பனை செய்வதனால் கிடைக்கின்ற வருமானம் அங்கரீக்கப்படுகின்றது. அமைப்பானது இவற்றுடன் தொடர்புடைய முகாமைத்துவம் சார்ந்த எத்தகைய கடப்பாடுகளையும் தொடர்ச்சியாக கொண்டிருக்காது. குறிப்பாக இவற்றின் உரிமைகள் காணப்படாது. விற்பனை செய்யப்பட்ட பொருட்கள் மீது எத்தகைய கட்டுப்பாடுகளையும் இது கொண்டிருக்காது.

வட்டி வருமானம்

சகலவிதமான நிதிக்கருவிகளும் இலதாக்கப்பட்ட செலவில் மதிப்பிடப்படுகின்றது. வட்டியுடன் தொடர்புடைய நிதி ரீதியான சொத்துக்கள் விற்பனைக்காக உள்ளவை என வகைப்படுத்தப்படுகின்றது அல்லது வட்டி வருமானம் அல்லது வினைத்திறன் மிக்க வட்டி வீதத்தை பயன்படுத்தி செலவுகள் பதியப்படுகின்றன. எதிர்கால பண கொடுப்பனவுகள் அல்லது எதிர்பார்க்கப்பட்ட நிதிக் கருவியின் மதிப்பிடப்பட்ட ஆயுள் அல்லது குறுகிய காலம் இவற்றில் எது ஏற்புடையதோ அதன் அடிப்படையில் வீதம் மதிப்பிடப்பட்டு கழிவுகள் வழங்கப்படுகின்றன. நிதி ரீதியான சொத்து அல்லது பொறுப்பின் முன்னெடுத்துச் செல்லப்படும் நிகர தொகை கருத்திற் கொள்ளப்படுகின்றது. வட்டி வருமானம் ஆனது இலாபம் அல்லது நட்டம் தொடர்பான கூற்றின் நிதி வருமானத்தில் உள்ளடக்கப்படுகின்றது.

சொத்துக்களை விற்பதனால் ஏற்படக்கூடிய இலாபம் அல்லது நட்டங்கள்

சொத்துக்களை விற்பனை செய்வதனால் ஏற்படக்கூடிய இலாபங்கள் அல்லது நட்டங்கள் ஆனது தேறிய விற்பனை இலாபத்துடன் முன்னெடுத்துச் செல்லப்படும் சொத்துக்களின் தொகை மற்றும் தொகையுடன் ஒப்பிடப்பட்டு ஏனைய தொழிற்பாட்டு வருமானம் அதாவது இலாபம் அல்லது சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய தொழிற்பாட்டு வருமானத்துடன் தேறிய தொகையாக அங்கீகரிக்கப்படுகின்றது. விற்பனை செய்யப்பட்ட சொத்துக்கள் மீள் மதிப்பீட்டின் பொழுது உள்ளடக்கப்படும் தொகையானது ஒதுக்கத்தைவிட அதிகமாக இருக்கின்ற பொழுது தேக்கி வைக்கப்பட்ட வருமானத்தில் இது உள்ளடக்கப்படுகின்றது.

2..2..3 வரி விதித்தல்

தற்போதைய வரிகள்

வருமான வரி சார்ந்த செலவுகள் ஆனது தற்போதைய வருமான வரி, உரிமைமுதலுடன் நேரடியாக தொடர்புபட்டு அங்கீகரிக்கப்பட்ட பொருட்கள், உரிமை முதலாக அங்கீகரிக்கப்படும் பொழுது அவை தவிர்ந்த ஏனைய இலாபம் அல்லது நட்டம் வருமானவரி செலவாக அங்கீகரிக்கப்படுகிறது.

தற்போதைய வரியானது குறிப்பிட்ட காலத்திற்கு வரி செலுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற பொருட்களுக்கானது, அறிக்கையிடும் திகதியில் காணப்படுகின்ற வட்டி விகிதத்தை கருத்தில் கொண்டு இது மேற்கொள்ளப்படுகின்றது. அத்தோடு கடந்த வருடங்களில் ஏதாவது செலுத்தவேண்டிய வரி தொடர்பான சீர்செய்தல்கள் காணப்படின் அவையும் கருத்தில் கொள்ளப்படுகின்றன.

விற்பனை வரி

பின்வருவனவற்றை தவிர்ந்த ஏனைய வருமானங்கள் செலவுகள், விற்பனை வரி மூலமாக அங்கீகரிக்கப்பட்ட தேறிய தொகைகள் ஆகியன கருதப்படுகின்றன:

- சொத்துக்கள் அல்லது சேவைகள் ஆகியவற்றை கொள்வனவு செய்ததன் மூலம் ஏற்படுகின்ற விற்பனை வரியை வரி அறவிடும் அதிகார அமைப்பிடம் இருந்து மீள அறவிட முடியாத நிலை ஏற்படுகின்றது போது அத்தகைய சூழ்நிலையில் அந்த சொத்தை கொள்வனவு செய்த செலவின் ஓர் அங்கமாக அல்லது செலவுக்கான ஒரு விடயமாக எது ஏற்புடையதோ அதனடிப்படையில் விற்பனை வரி அங்கீகரிக்கப்படுகிறது.
- பெறுகைகள் மற்றும் கொடுக்க வேண்டியவைகள் ஆகியன உள்ளடக்கப்பட்ட விற்பனை வரியுடன் குறிப்பிடப்படுகின்றன.

வரி அறவிடும் அமைப்பிடம் இருந்து பெற வேண்டிய அல்லது செலுத்தவேண்டிய தேறிய விற்பனை வரி தொகையானது பெறவேண்டிய தொகையும் ஓர் பகுதியாக அல்லது செலுத்த வேண்டிய தொகையின் வகையின் ஓர் பகுதியாக நிதி நிலை தொடர்பான கூற்றில் குறிப்பிடப்படுகின்றது.

பிற்போடப்பட்ட வரி

பிற்போடப்பட்ட வரியானது ஐந்தொகை பொறுப்பு முறைகளைப் பயன்படுத்தி, முன்னெடுத்துச் செல்லப்படும் தொகை மற்றும் பொறுப்புகள் ஆகியவற்றிற்கு இடையிலான தற்காலிக வித்தியாசம் உள்ளடக்கி நிதி ரீதியான அறிக்கையிடல் நோக்கம் மற்றும் வரிச்செலுத்துகை நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்ட தொகைகள் ஆகியவற்றின் அடிப்படையில் குறிப்பிடப்படும்

2.2.4 செலவுகள்

வியாபாரத்தைக் கொண்டு நடத்துகின்றப் பொழுது ஏற்படுகின்ற சகலவிதமான செலவுகளும் குறிப்பிட்ட காலத்திற்கான இலாபம் தொடர்பான விடயங்களுடன் வருமானத்திலிருந்து அறவிடப்படுகின்றது.

திருத்தங்கள் மற்றும் நீடித்தல் போன்றவை தொடர்பான கட்டணங்களானது குறிப்பிட்ட காலத்திற்கான இலாபம் அல்லது நட்டதிலிருந்து அறவிடப்படும். எதுதொடர்பில் செலவு ஏற்பட்டதோ அதனடிப்படையில் இது மேற்கொள்ளப்படும்.

2.2.4.1 கடன் பெறுதல் செலவு

கடன் பெறுதல் செலவுகளானது எந்த காலப்பகுதியில் ஏற்படுகின்றதோ அக்கால பகுதிக்கான செலவுகளாக அங்கீகரிக்கப்படும். நேரடியாக பெறுகைகளுடன் தொடர்புடையதாக இருக்கும் பட்சத்தில் மாத்திரம் இது கொள்ளப்படாது. நிர்மாணம் அல்லது தகுதிபெற்ற சொத்து தொடர்பான உற்பத்தி ஆகியவற்றின் பொழுது இது மேற்கொள்ளப்படாது. இத்தகைய சந்தர்ப்பங்களில் அச் சொத்து தொடர்பான செலவாக மூலதனத்தின் ஓர் அங்கமாக சேர்க்கப்படும்.

2.2.4.2 நிதிச் செலவுகள்

இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட கடன் பெறுதல் தொடர்பான வட்டி வீதத்தை உள்ளடக்கியதாக நிதி ரீதியான செலவுகள் காணப்படும்.பெறுகைகளுடன் நேரடியாக தொடர்பற்றதாக காணப்படும் கடன் பெருகை செலவுகளானது தகைமை பெற்ற சொத்து தொடர்பான நிர்மானம் அல்லது உற்பத்தி ஆகியன பயனுறுதிமிக்க வட்டி வீத முறையை பயன்படுத்தி இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படும்.

வெளிநாட்டு நாணயமாற்று தொடர்பான இலாபங்கள் அல்லது நட்டங்கள் ஆகியன தேறிய அடிப்படையில் அறிக்கையிடப்படும்.

2.2.5 சொத்து, பொறித்தொகுதி மற்றும் உபகரணம்

சொந்தமான சொத்துக்கள்

குறைவாக கூட்டிணைக்கப்பட்ட தேய்மானச் செலவு மற்றும் கூட்டிணைக்கப்பட்ட இழப்புகள் ஏதாவது காணப்படும் பட்சத்தில் அதனடிப்படையில் சொத்து, பொறித்தொகுதி மற்றும் உபகரணம் சார்ந்த பொருட்கள் அளவிடப்படும்.

சொத்து, பொறித்தொகுதி மற்றும் உபகரணம் ஆகியவற்றுக்கான செலவுகள் குறிப்பிட்ட சொத்தை பெற்றுக் கொள்வதுடன் தொடர்புடைய நேரடி செலவுகளை உள்ளடக்கியதாக காணப்படும். சுயமாக நிர்மாணிக்கப்பட்ட சொத்துக்களின் செலவானது பொருட்களுக்கான செலவுகள் மற்றும் வேலை செய்வதுடன் தொடர்புடைய நேரடி செலவுகள், எதிர்பார்க்கப்பட்ட நோக்கத்திற்காக வேலை செய்யும் நிலைமைக்கு இந்த சொத்தை கொண்டுவருவதுடன் தொடர்புடைய ஏதாவது நேரடி செலவுகள் அந்த சொத்தை அகற்றுவதற்கான அல்லது புதிய தளத்தில் நிர்மாணிப்பது தொடர்பில் ஏற்பட்ட செலவுகள், தகைமை பெற்ற சொத்தினை பெற்றுக்கொள்வதற்காக கடன் செலவுகள் ஆகியவற்றை உள்ளடக்கியதாக காணப்படும். சம்பந்தப்பட்ட உபகரணத்துடன் நேரடியாக தொடர்புடைய கொள்வனவு செய்யப்பட்ட ஒன்றிணைக்கப்பட்ட மென்பொருள் அந்த உபகரணத்தின் ஒருபகுதியாக மூலதனமாக காணப்படும்.

ஒரு சொத்து, பொறித்தொகுதி மற்றும் உபகரணம் ஆகியவற்றின் ஏதாவது பகுதிகளுக்கு மாறுபட்ட பயன் தரக்கூட ஆயுள் காலங்கள் காணப்படும் பட்சத்தில் அவை குறிப்பிட்ட சொத்து, பொறித்தொகுதி மற்றும் உபகரணம் ஆகியவற்றின் தனியான விடயமாக கருத்திற் கொள்ளப்படும்.

குத்தகை சொத்துக்கள்

ஏதாவது ஒரு வகையான ஏற்பாடு குத்தகை என்பதை தீர்மானிப்பது ஆனது ஆரம்பத் திகதியில் அது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் காணப்படுகின்றது, இத்தகைய ஏற்பாடுகளை பூரணப்படுத்துவதானது குறிப்பிட்ட சொத்தை பயன்படுத்துவது தொடர்பில் அல்லது அந்த சொத்தை பயன்படுத்துவதற்கு தொடர்பான உரிமைகள் எத்தகைய ஏற்பாட்டின் அடிப்படையில் குறிப்பிடப்பட்டிருக்கின்றதோ அதன் அடிப்படையில் தங்கியுள்ளது. சிலவேளைகளில் இத்தகைய ஏற்பாடுகள் அத்தகைய உரிமைகள் பற்றி தெட்டத்தெளிவாக குறிப்பிடாமலும் இருக்கலாம்.

கம்பெனிக்கு மாற்றப்படுகின்றன நிதி ரீதியான குத்தகைகள், குத்தகைக்கு பெறப்பட்ட பொருளின் உரிமைத்துவத்துடன் தொடர்புடைய இடை நேர் விளைவான நன்மைகள் மற்றும் இடர்கள் ஆகியவற்றுடன் குத்தகை சொத்தின் உண்மையான பெறுமதி அல்லது ஆகக்குறைந்த கட்டணங்களுடன் தொடர்புடைய தற்போதைய பெறுமதியுடன் தொடர்புபட்டதாக காணப்படுகின்றது. குத்தகை கொடுப்பனவுகளானது கட்டணங்கள் மற்றும் குத்தகை பொறுப்பின் குறைவு ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்துள்ளது. எஞ்சிய தொகைக்கான தொடர்ச்சியான வட்டி விகிதத்தை அடையும் முகமாக இவை காணப்படுகின்றன. நிதி ரீதியான கட்டணங்களானது இலாபம் அல்லது நட்டம் தொடர்பான கூற்றில் நிதிச் செலவுகளாக அங்கீகரிக்கப்படுகின்றன.

குத்தகைச் சொத்தானது அந்த சொத்தின் பயன்பாட்டு ஆயுளின் காலப்பகுதியில் தேய்மானம் அடையும் பட்சத்தில் குத்தகைக் கால திகதியில் கம்பெனியானது அதன் உரிமைத்துவத்தை அடையாத பட்சத்தில் மதிப்பிடப்பட்ட கால பகுதியை விட குறைவான காலப்பகுதியில் அத்தகைய சொத்துக்கள் தேய்மானத்தை அடையும் பட்சத்தில் அத்தகைய குத்தகை சொத்தானது தேய்மானம் ஒற்றதாகக் கருதப்படும்.

தொழிற்பாட்டு குத்தகை கொடுப்பனவுகள் ஆனது இலாபம் தொடர்பான கூற்றில் அல்லது நட்டம் தொடர்பான கூற்றில் குத்தகை காலப்பகுதியின் நேரடி அடிப்படையில் தொழிற்பாட்டு செலவாக அங்கீகரிக்கப்படும்.

பின்னர் ஏற்படக்கூடிய செலவுகள்

ஒரு சொத்து, பொறித்தொகுதி அல்லது உபகரணம் ஒன்றின் ஏதாவது பாகம் ஒன்றை பிரதியீடு செய்வதற்கான செலவு அதன் காரணமாக எதிர்காலத்தில் கம்பெனிக்கு நன்மைகள் ஏற்படும் என கருதும் பட்சத்தில் மேலும் அத்தகைய செலவினை நம்பகமாக அளவிட முடியும் பட்சத்தில் முன்னெடுத்துச் செல்லப்படும் தொகையாக அது அங்கீகரிக்கப்படுகின்றது.கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அங்கீகாரம்

இழக்கின்ற கொள்கைக்கு ஏற்ப அவ்வாறு பிரதியீடு செய்யப்பட்டதற்கான தொகை முன்னெடுத்து செல்லப்படும் தொகை அதற்கேற்ற விதத்தில் அங்கீகாரத்தை இழக்கின்றது.

சொத்து, பொறித்தொகுதி மற்றும் உபகரணம் ஒன்றை அன்றாடம் சீர் செய்வதற்காக செலவுகள் அதனால் ஏற்பட்ட தொகையானது இலாபம் அல்லது நட்டம் தொடர்பான கூற்றில் குறிப்பிடப்படும்.

அங்கீகாரம் இழத்தல்

சொத்து, பொறித்தொகுதி மற்றும் உபகரணமொன்றின் முன்னெடுத்துச் செல்லப்படும் தொகையானது அதனை விற்பனை செய்யும் பட்சத்தில் அதற்குரிய அங்கீகாரத்தை இழக்கின்றது: அல்லது அதிலிருந்து எதிர்கால பொருளாதார ரீதியான நன்மைகள் ஏதும் இல்லை எனும் பொழுது அங்கீகாரத்தை இழக்கின்றது. இவ்வாறு அங்கீகாரம் இழக்கப்படுவதனால் ஏற்படக்கூடிய இலாபம் அல்லது நட்டம் தொடர்பான கூற்றில் குறிப்பிடப்படுவதுடன் இதனால் கிடைக்கின்ற இலாபம் வருமானமாக கருதப்படமாட்டாது..

தேய்மானம்

ஒரு சொத்து பொறித்தொகுதி அல்லது உபகரணமொன்றின் மதிப்பிடப்பட்ட பயன்பாட்டுக் காலமானது அதன் ஒவ்வொரு பகுதிக்குமான இத்தகைய காலம் நேர்கோட்டு அடிப்படையில் இலாபம் அல்லது நட்டம் தொடர்பான கூற்றில் தேய்மானம் குறிப்பிடப்படுகின்றது. இதன் மூலம் இப்பொருள் தொடர்பான நுகர்வுகள் எதிர்காலத்தில் எவ்வாறு இடம்பெறும் அதன் எதிர்கால பொருளாதார நன்மைகள் ஆகியவற்றை கருத்திற் கொண்டு இவை மேற்கொள்ளப்படும்.

நிதிக் குத்தகைகள் மூலம் பெறப்பட்ட சொத்துக்கள் ஆனது குத்தகை காலத்தின் குறுகிய காலத்தின் தேய்மானம் அடையும் பட்சத்தில் மேலும் குத்தகை காலத்தின் இறுதியில் அச்சொத்து சம்பந்தமான உடைமை கம்பெனிக்கு கிடைக்கும் என நிச்சயமாக கருதும் பட்சத்தில் அதனை வைத்திருப்பதன் காரணமாக அல்லது உடைமையாவதன் காரணமாக அதற்கு நிகரான பயன்பாட்டு காலத்தை கருத்தில் கொண்டு இவை மேற்கொள்ளப்படும்.

ஒரு சொத்தின் தேய்மானம் ஆனது பயன்பாட்டிற்காக கிடைக்கின்ற பொழுது மற்றும் அல்லது அத்தகைய சொத்து விற்பனைக்காக அல்லது அங்கீகாரம் இழக்கும் என வகைப்படுத்தப்பட்ட திகதிக்கு முன்னர் ஆரம்பிக்கும் பட்சத்தில் அதன் தேய்மானம் ஆரம்பிக்கின்றது.

சொத்துக்களின் உதிரிப் பெறுமானங்கள், பயன்பாட்டு ஆயுள், தேய்மான முறைகள் ஆகியன ஒவ்வொரு நிதி ஆண்டிலும் மீளாய்வு செய்யப்படுவதுடன் பொருத்தமான முறையில் அவசியமான சீர்செய்தல் மேற்கொள்ளப்படும்.

2.2.6 கையிருப்புகள்

கையிருப்புகள் பழைமையாகிவிட்டதா அல்லது மிகவும் மெதுவாக நகர்கின்றனவா என்பதை உரிய முறையில் ஆராய்ந்ததன் பின்னர் குறைவான செலவு அல்லது தேறிய யதார்த்த பெருமானம் ஆகியவற்றின் அடிப்படையில் கையிருப்புகள் மதிப்பிடப்படுகின்றன. தேறிய யதார்த்த பூர்வமான பெறுமதியானது சாதாரண வியாபார நடவடிக்கைகளின் பொழுது பூரணப்படுத்தலின் மதிப்பிடப்பட்ட குறைவான பெறுமதி விற்பனை செய்யக்கூடியது இத்தகைய கையிருப்புகள் ஆகும். மேலும் விற்பனை செய்வதற்கு அவசியம் என மதிப்பிடப்பட்ட செலவும் கருத்திற் கொள்ளப்படும்.

இத்தகைய கையிருப்புகளை தற்போதைய இடத்திற்கு கொண்டு வருவதற்காக ஏற்பட்ட செலவுகள் மற்றும் நிலைமைகள் ஆகியன பின்வரும் சூத்திரத்தை அடிப்படையாகக்கொண்டு கருத்திற் கொள்ளப்படுகின்றன.

உற்பத்தி கையிருப்பு - நேரடி செலவின் அடிப்படையில் உற்பத்திசார் கையிருப்பு இதில் அறிக்கையிடும் திகதிவரை இதனோடு தொடர்புபட்ட ஏனைய செலவுகள்

கரும்பு - ஆரம்ப செலவு மற்றும் அதனோடு தொடர்புபட்ட ஏனைய பகுதி செலவுகள் ஆகியன அறிக்கையிடும் திகதிவரை கருத்திற் கொள்ளப்படுகின்றன

ஏனைய கையிருப்புகள் - உண்மையான செலவு

மாற்றப்படுகின்ற பொருட்கள் - உண்மையான செலவு

2.2.7 நிதி ரீதியான கருவிகள் - ஆரம்பம் அங்கீகாரம் மற்றும் பின்னரான அளவீடுகள்

நிதி ரீதியான சொத்துக்கள்

ஆரம்ப அங்கீகாரம் மற்றும் அளவீடுகள்

LKAS 39 நோக்கி எல்லைக்குட்பட்ட நிதி ரீதியான சொத்துக்கள் ஆனது இலாபம் அல்லது நட்டம், கடன்கள் மற்றும் பெறுகைகள், முதிர்ச்சி முதலீடுகளை சார்ந்தவை, விற்பனைக்காக உள்ள நிதி ரீதியான சொத்துக்கள், அல்லது வினைத்திறன் மிக்க இழப்பீட்டு காப்புகள் இவற்றுள் எது பொருத்தமானதோ அதற்கேற்ப இவை வகைப்படுத்தப்படுகின்றன. ஆரம்ப அதிகாரத்தின் பிரகாரம் தனது நிதி ரீதியான சொத்துக்களை எவ்வாறு வகைப்படுத்துவது என்பது பற்றி கம்பெனி தீர்மானிக்கின்றது.

சகலவிதமான நிதி ரீதியான சொத்துக்களும் ஆரம்பத்தில் அதன் உண்மை பெறுமதி மற்றும் கொடுக்கல் வாங்கல் செலவு ஆகியவற்றின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகின்றது. இருப்பினும் இலாபம் அல்லது நட்டம் மூலமான உண்மை பெறுமதியின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்ட நிதி ரீதியான சொத்துக்களை பொருத்தவரையில் இம்முறை பிரயோகிக்கப்படுவதில்லை. ஒழுங்கு விதிகள் அல்லது சந்தையிடல் சமவாயம் ஆகியவற்றின் படி தாபிக்கப்பட்ட குறிப்பிட்ட கால வரையறையினுள் விநியோகிக்க தேவைப்பாடுடைய கொள்வனவுகள் அல்லது நிதி ரீதியான சொத்துக்களின் விற்பனை ஆகியன விற்பனை செய்யப்படும் திகதிக்கு ஏற்ப அங்கீகரிக்கப்படுகின்றன. உதாரணம்: கம்பனியானது கொள்வனவினை மேற்கொண்ட அல்லது சொத்தை விற்பனை செய்த திகதி.

கம்பனியின் நிதி ரீதியான சொத்துக்களின் குறிப்புகள் ஆனது பணம் மற்றும் குறுகிய கால வைப்புகள், வியாபாரம் மற்றும் ஏனைய பெறுகைகள், கடன் மற்றும் ஏனைய பெறுகைகள் ஆகியவற்றை உள்ளடக்கியதாக காணப்படுகின்றது.

பின்னரான அளவீடுகள்

நிதிச்சொத்துக்கள் தொடர்பான பின்னரான அளவீடுகள் ஆனது கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அவற்றின் வகைப்படுத்தலில் தங்கியுள்ளது:

கடன்கள் மற்றும் பெறுகைகள்

கடன்கள் மற்றும் பெறுகைகள் ஆனது சுறுசுறுப்பான சந்தையில் குறிப்பிடப்படாத நிரந்தரமான அல்லது தீர்மானிக்கக்கூடிய கொடுப்பனவுகள், பங்குசாராத நிதி ரீதியான சொத்துக்களாக கடன்களும் பெறுகைகளும் காணப்படுகின்றன. ஆரம்ப அளவீட்டின் பின்னர் EIR முறை மற்றும் குறைவான இழப்பு ஆகியவற்றை பயன்படுத்தி இலதாக்கப்பட்ட செலவில் அத்தகைய நிதி ரீதியான சொத்துக்கள் பின்னர் அளவிடப்படுகின்றன. இலதாக்கப்பட்ட செலவானது ஏதாவது கழிவுகள் அல்லது பெறுகையின் பொழுதான கட்டணங்கள் மற்றும் EIR இன் ஒரு பகுதியான ஒருங்கிணைக்கப்பட்ட செலவுகள் போன்றவற்றை கருத்திற் கொண்டு மதிப்பிடப்படுகின்றது. EIR இலதாக்கப்பட்ட்தானது இலாபம் அல்லது நட்டம் தொடர்பான கூற்றில் நிதி வருமானத்தில் உள்ளடக்குகின்றது.

அங்கீகாரம் இழத்தல்

நிதி ரீதியான சொத்து (நிதி ரீதியான சொத்தின் ஒரு பகுதி அல்லது நிகரான நிதி ரீதியான சொத்துக்கள் குழுக்களின் ஒரு பகுதி பின்வரும் சந்தர்ப்பங்களில் பொழுது அங்கீகாரம் இழக்கின்றது:

- சொத்து காலாவதியானதன் பின்னர் அதிலிருந்து பண ஓட்டங்களை பெறுவதற்கான உரிமைகள்
- சம்பந்தப்பட்ட சொத்திலிருந்து காசோட்ட உரிமைகளை பெற்றுக் கொள்வதற்கான உரிமையை கம்பெனி மாற்றி இருக்கும் பட்சத்தில் அல்லது எவ்வித பொருள் ரீதியான தாமதமும் இன்றி மூன்றாம் தரப்பொன்றிற்கு பெற்றுக்கொள்ளப்பட்ட காசோட்டத்தை செலுத்துவதற்கான கடப்பாடு இருக்கிறது என ஊகிக்கின்றப் பொழுது பின்வருவனவற்றுள் ஏதாவது ஏற்பாடுகளின் "கடவு மூலமான நிலைமையின் கீழ்"

அ) சம்பந்தப்பட்ட சொத்துக்கள் தொடர்பான சகலவிதமான இடர்கள் மற்றும் விருதுகள் ஆகியவற்றை கணிசமான அளவு கம்பெனி மாற்றி இருக்கின்ற பொழுது அல்லது

ஆ) சம்பந்தப்பட்ட சொத்துக்கள் அல்லது இடர்கள் தொடர்பான சகல விதமான இடர்கள் மற்றும் விருதுகள் ஆகியவற்றை கம்பெனி ஆனது மாற்றி இருக்காத சந்தர்ப்பத்தில் அல்லது கணிசமான அளவு தன்னிடம் தேக்கி வைத்திருக்காத நிலையில், ஆனால் அந்த சொத்து தொடர்பான கட்டுப்பாட்டை மாற்றி இருக்கின்ற பொழுது.

சொத்திலிருந்து காசோட்டத்தை பெற்றுக்கொள்வதற்காக தனது உரிமையை கம்பெனியொன்று மாற்றி இருக்கின்ற பொழுது அல்லது மாற்றுதல் தொடர்பான உடன்படிக்கையொன்றில் மேற்கொண்டிருக்கிறது பொழுது, அதன் உரிமை தொடர்பான இடர்கள் மற்றும் விருதுகள் ஆகியவற்றை எந்த அளவுக்கு தன்னுடன் தேக்கிவைத்து இருக்கின்றது என்பது மதிப்பிடப்படுகின்றது. சம்பந்தப்பட்ட சொத்து தொடர்பான இடர்கள் அல்லது விருதுகள் ஆகியவற்றை கம்பெனியானது கணிசமான அளவு மாற்றி இருக்காத பட்சத்தில் அல்லது தன்னுடன் தேக்கி வைத்திருக்காத நிலையில் அல்லது அந்த சொத்து தொடர்பான கட்டுப்பாட்டை மாற்றி இருக்காத நிலையில் அந்த சொத்து தொடர்பில் கம்பெனியானது தொடர்ச்சியான ஈடுபாடுகளை கொண்டுள்ளதாக சம்பந்தப்பட்ட சொத்து அங்கீகரிக்கப்படுகிறது.இத்தகைய சந்தர்ப்பங்களில் கம்பெனியானது அதனுடன் பொறுப்பு உள்ளதாக ஏற்றுக் கொள்கின்றது. இவ்வாறு மாற்றப்பட்ட சொத்து மற்றும் அதனோடு தொடர்புடைய பொறுப்புகள் ஆகியன அது தொடர்பான உரிமைகள் மற்றும் கடப்பாடுகள் ஆகியன கம்பெனியிடம் இருப்பதை அங்கீகரிப்பதாக அவை பிரதிபலிக்கின்றன.

மாற்றப்பபட்ட சொத்து தொடர்பான உத்தரவாதத்தை தொடர்ந்தும் பொறுப்பேற்பதாக காணப்படுகின்ற சொத்துக்கள் அச்சொத்தின் மூலம் பெறுமதி தொடர்பில் முன்னெடுத்துச் செல்லப்படும் ஆகக்குறைந்த தொகையின் அடிப்படையில் மதிப்பிடப்படுகின்றது. மேலும் கம்பெனி மீள்செலுத்தவேண்டிய ஆகக்கூடிய தொகையும் இச்சந்தர்ப்பத்தில் கருத்திற் கொள்ளப்படுகின்றன.

நிதிச் சொத்துக்களுக்கான சேதம்

ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் நிதிச் சொத்துக்கள் அல்லது நிதிச் சொத்துக்கள் குழுவொன்றிற்கு ஏதாவது சேதம் ஏற்பட்டிருக்கிறதா என புறவயத்தன்மை மிக்க சான்றுகள் காணப்படுகின்றனவா என்பதை கம்பெனி மதிப்பிடுகிறது. ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட நிகழ்வுகளின் காரணமாக சொத்துக்களுக்கு சேதம் ஏற்பட்டிருக்கின்றது என புறவயத்தன்மை மிக்க சான்றுகள் காணப்படும் பட்சத்தில் மற்றும் அத்தகைய சொத்துக்களுக்கு இழப்புகள் ஏற்பட்டிருக்கின்றது என அங்கீகரிக்கப்படும் பொழுது மற்றும் இத்தகைய சேதங்களின் காரணமாக எதிர்கால காசோட்டத்தில் ஏதாவது தாக்கங்கள் ஏற்படலாம் என கருதும் பட்சத்தில் அத்தகைய நிதி ரீதியான சொத்து அல்லது நிதி ரீதியான சொத்துக்களின் தொகுதி ஆகியன நம்பத்தக்க முறையில் மதிப்பிடப்படுகின்றது. இத்தகைய சேதம் தொடர்பான சான்றுகள் ஆனது கடனைப் பெற்றுக் கொண்டவர்கள் அல்லது கடனாளிகள் குழு ஒன்று குறிப்பிடக்கூடிய நிதி ரீதியான பிரச்சினைகளை எதிர் கொள்கின்றார்களா என் குறிகாட்டிகள ' முலம் கருத்தில் கொள்ளப்படும். அத்தோடு மூலத்தொகை அல்லது வட்டி ஆகியவற்றை செலுத்துவதில் ஏதாவது காலதாமதம் அல்லது பிரச்சனைகள் உள்ளனவா என ஆராயப்படும். மேலும் வங்குரோத்தடைவதற்கான நிலையில் இருக்கின்றனவா அல்லது ஏதாவது நிதி ரீதியான அங்கீகாரம் இழந்த நடவடிக்கைகள் அவதானிக்கக் கூடிய தரவுகள் இருக்கின்றனவா, மதிப்பிடப்பட்ட எதிர்கால காசோட்டத்தில் அளவிடக்கூடிய குறைபாடுகள் இருக்கின்றனவா, என ஆராயப்பட்டு இத்தகைய நிலைமைகளுக்கும் பொருளாதார நிலைமைகளுக்கும் ஏதாவது தொடர்புகள் இருக்கின்றனவா என ஆராயப்படும்.

இலதாக்கப்பட்ட செலவின் அடிப்படையில் முன்னெடுத்துச் செல்லப்பட்ட நிதி ரீதியான சொத்துக்கள் தனிப்பட்ட முறையில் இத்தகைய நிதி ரீதியான சொத்துக்களுக்கு சேதம் அடைந்துள்ளன என்பதற்கு ஏதாவது புறவயத்தன்மை மிக்க சான்றுகள் இருக்கின்றனவா என்பதை கம்பெனி ஆராயும். சில நிதி ரீதியான சொத்துக்கள் தனிப்பட்ட முறையில் முக்கியத்துவம் மிக்கதாக இருக்கும் அல்லது சில நிதி ரீதியான சொத்துக்கள் கூட்டாக முக்கியத்துவம் பெற்றிருப்பினும் தனிப்பட்ட முறையில் முக்கியத்துவம் குன்றியவையாக இருக்கலாம். தனிப்பட்ட முறையில் மதிப்பீடு செய்யப்பட்ட நிதி ரீதியான சொத்து ஒன்றிற்கு சேதம் அடைந்தமைக்கான புறவயத்தன்மை மிக்க சான்றுகள் எதுவும் இல்லை என கம்பெனி தீர்மானிக்கும் பட்சத்தில் அது முக்கியத்துவம் மிக்கதாக இருந்தாலும் அல்லது இல்லாவிட்டாலும் ஒத்தகடன் இடர் சொத்துக்கள் பண்புகளைக் கொண்ட நிதி ரீதியான சொத்துக்கள் குழுவில் அதனை உள்ளடக்குவதுடன் அதன் சேதம் பற்றி கூட்டாக மதிப்பீடு செய்யப்படும். சேதம் பற்றி தனிப்பட்ட முறையில் மதிப்பீடு செய்யப்பட்ட சொத்துகள், அவற்றில் எத்தகைய சொத்துக்கு சேதம் ஏற்பட்டிருக்கின்றதோ அல்லது தொடர்ச்சியாக சேதம் ஏற்படுகின்றதோ அத்தகையவை தொடர்பான அங்கீகாரங்கள் சேதம் பற்றிய கூட்டு மதிப்பீட்டில் உள்ளடக்கப்படுவதில்லை. சேதத்தின் காரணமாக இழப்பு ஏற்பட்டு இருக்கின்றது என்பதை அறிந்து கொள்வதற்கு புறவயத்தன்மை மிக்க சான்றுகள் காணப்படும் பட்சத்தில் இத்தகைய

இழப்பிற்கான தொகை சொத்துக்களை முன்கொண்டு வந்ததினால் ஏற்படுகின்ற வித்தியாசம் எதிர்கால காசோட்டம் தொடர்பில் தற்சமயம் மதிப்பிடப்பட்ட பெறுமதி ஆகியவற்றின் அடிப்படையில் கணிப்பிடப்படும். இதுவரை ஏற்படாத எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய கடன் இழப்புகள் இங்கு தவிர்க்கப்படும். எதிர்காலத்திற்காக மதிப்பிடப்பட்ட காசோட்டம் தொடர்பான தற்போதைய பெறுமதி, நிதி ரீதியான சொத்துக்களின் உண்மையான ஏற்புடைய வட்டி வீதத்தில் இருந்து கழிக்கப்படும். மாறுபட்ட வட்டி வீதங்களை கொண்ட கடன் எனில் இழப்பு ஏற்பட்ட ஏதாவது சொத்து தொடர்பான அளவிடுவதற்கான கழிக்கப்பட்ட வீதமானது தற்போதைய EIR ஆகும். சொத்துக்களின் முன்னெடுத்துச் செல்லப்படும் தொகையானது படிகணக்கொன்றை பயன்படுத்தி அதன் மூலம் கழிக்கப்படுமாயின் இத்தகைய இழப்பு தொகையானது. அங்கீகரிக்கப்பட்டு இலாபம் அல்லது நட்டம் தொடர்பான கூற்றில் உள்ளடக்கப்படும்.

பெறுகைகள் அதனோடு தொடர்புடைய படியுடன் சேர்த்து அதனை எதிர்காலத்தில் அறவிடுவதற்கான சாதகமான வாய்ப்புகள் இல்லாத பட்சத்தில் அவை பதிவளிக்கப்படும் மற்றும் சகல விதமான பிணைகளும் பெற்றுக்கொள்ளப்படும் அல்லது அவை கம்பெனிகளுக்கு மாற்றப்படும். அடுத்து வருகின்ற வருடங்களில் மதிப்பிடப்பட்ட சேதம் தொடர்பான தொகையானது அதிகரிக்கின்ற பட்சத்தில் அல்லது குறைகின்ற பட்சத்தில் அதாவது இத்தகைய நிகழ்வுகள் சேதம் மதிப்பிடப்பட்டதன் பின்னர் இடம்பெறும் பட்சத்தில் ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்ட சேதம் தொடர்பான இழப்பு அதிகரிக்கு பட்சத்தில் அல்லது படி தொடர்பான கணக்கினை சீர் செய்வதனால் இத்தகைய குறைபாடு ஏற்படலாம், எதிர்கால பதிவளித்தல் பின்னர் கண்டறியப்படும் பட்சத்தில் இத்தகைய மீள் அறவீடு இலாபம் அல்லது நட்டம் தொடர்பான கூற்றில் குறிப்பிடப்படும்.

நிதி ரீதியான பொறுப்புகள்

ஆரம்ப அங்கீகாரம் மற்றும் அளவீடுகள்

LKAS 39 நோக்கெல்லைக்கு உட்பட்ட நிதி ரீதியான பொறுப்புகளானது இலாபம் அல்லது நட்டம், கடன்கள் மற்றும் பெறுகைகள் அல்லது வினைத்திறன் மிக்க காப்பீடு மூலமான காப்பீட்டு கருவிகளாக பெற்றுக்கொள்வதற்காக வடிவமைக்கப்பட்டவைகள் இவற்றில் எது பொருத்தமானதோ அதன் மூலமாக உண்மை பெறுமதியின் அடிப்படையில் நிதி ரீதியான பொறுப்புகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. ஆரம்ப அங்கீகாரத்தின் படி நிதி ரீதியான பொறுப்புகளை வகைப்படுத்துவது பற்றி கம்பெனி தீர்மானிக்கின்றது. சகலவிதமான நிதி ரீதியான பொறுப்புகளும் உண்மையான பெறுமதி மற்றும் கடன்கள் மற்றும் பெறுகைகள் ஆகியவற்றை பொருத்தவரையில் நேரடியாக தாக்கம் செலுத்துகின்ற கொடுக்கல்-வாங்கல் செலவுகள் ஆகியவற்றின் அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகின்றன.

கம்பெனியின் நிதி ரீதியான பொறுப்புகள் ஆனது வியாபாரம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள், வங்கி மேலதிக பற்று, கடன்கள் மற்றும் பெறுமதிகள் ஆகியவற்றை உள்ளடக்கியதாக காணப்படுகின்றது.

பின்னரான அளவீடுகள்

நிதி ரீதியான சொத்துக்கள் தொடர்பான அளவீடானது கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அவற்றின் வகைப்படுத்தலில் தங்கியுள்ளது:

கடன்கள் மற்றும் பெறுகைகள்

ஆரம்ப அங்கீகாரத்தின் பின்னர் EIR முறையை பயன்படுத்தி இலதாக்கப்பட்ட செலவின் அடிப்படையில் வட்டி செலுத்த வேண்டிய கடன்கள் மற்றும் பெறுகைகள் ஆகியன பின்னர் அளவிடப்படுகின்றன. பொறுப்புகள் அங்கீகாரத்தை இழக்கின்ற பொழுது மற்றும் EIR இலதாக்கப்பட்ட செயன்முறை ஆகியவற்றின் மூலம் இலாபம் அல்லது நட்டம் தொடர்பான கூற்றில் இலாபங்களும் மற்றும் இழப்புகளும் அங்கீகரிக்கப்படுகின்றன.

இலதாக்கப்பட்ட செலவானது ஏதாவது கழிவுகள் அல்லது கொள்வனவின் பொழுதான கட்டணம் அல்லது முக்கிய EIR அங்கமாக திகழும் செலவுகள் மற்றும் கட்டணங்கள் ஆகியவற்றை கருத்திற்கொண்டு கணிப்பிடப்படுகின்றன. EIR இலதாக்கல் ஆனது இலாபம் அல்லது நட்டம் தொடர்பான கூற்றின் நிதி ரீதியான செலவுகளில் உள்ளடக்கப்பட்டுகின்றது.

அங்கீகாரம் இலத்தல்

பொறுப்பின் கீழ் காணப்படும ் கடப்பாடுகள் விடுவிக்கப்படும் பொழுது அல்லது இரத்தாகின்ற பொழுது அல்லது காலாவதியாகின்ற பொழுது நிதி ரீதியான பொறுப்புகளும் தமது அங்கீகாரத்தை இழக்கின்றன. தற்போது காணப்படுகின்ற நிதி ரீதியான பொறுப்புகள் ஆனது மாறுபட்ட நிபந்தனைகளின் கீழ் கொடுத்தவரினால் அல்லது தற்போது காணப்படுகின்ற பொறுப்பு தொடர்பான விடயங்கள் கணிசமான அளவு மாற்றி அமைக்கப்படும் பட்சத்தில் அத்தகைய மாற்றங்கள் அல்லது சீர்திருத்தங்கள் ஆகியன மூலப் பொறுப்பில் இருந்து அங்கீகாரத்தை இலக்கின்ற பட்சத்தில் மற்றும் புதிய பொறுப்பொன்று அங்கீகரிக்கப்படும்

பொழுது இது பிரதியீடு செய்யப்படுகின்றது. சம்பந்தப்பட்ட முன்னெடுத்துச் செல்லப்படும் தொகைகளில் காணப்படுகின்ற மாற்றமானது இலாபம் அல்லது நட்டம் தொடர்பான கூற்றில் காணப்படுகின்றன.

2.2.8 காசும், காசுக்கு சமமானவைகளும்

காசும், காசுக்கு சமமானவைகளும் என்பது கையிருப்பில் உள்ள பணம் மற்றும் துரிதமாக பணமாக மாற்றக்கூடிய நிலைமையில் உள்ள வைப்புகள், அவற்றை மாற்றுவதன் காரணமாக குறிப்பிடக்கூடிய இடர்கள் ஏற்படாத பொழுது அவை காசும், காசுக்கு சமமானவைகளுமாக கருதப்படுகின்றன. காசோட்ட கூற்று தொடர்பான நோக்கங்களுக்காக பணம் மற்றும் பணத்திற்கு நிகரானவைகளாக கையிருப்பில் உள்ள பணம் மற்றும் வங்கியில் காணப்படுகின்ற வைப்புகள், வங்கி மேலதிக பற்றில் தேறிய நிலுவைகள் ஆகியன கருதப்படுகின்றன.

.

2.2.9 நிதி சாராத சொத்துக்களின் சேதம்

சேதம் பற்றி ஏதாவது குறிகாட்டிகள் காணப்படுகின்றனவா என்பதை தீர்மானிக்கும் முகமாக ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் கம்பெனி சொத்துக்களை முன்னெடுத்துச் செல்லும் தொகைகள் மீள் ஆய்வு செய்யப்படுகின்றன. அத்தகைய ஏதாவது குறிகாட்டிகள் தென்படும் பட்சத்தில் சொத்துக்களின் மீள் அறவிடக்கூடிய தொகை மதிப்பிடப்படுகின்றது.

சொத்தொன்றின் மீள் அறவிடக்கூடிய தொகை அல்லது பணத்தை உருவாக்குகின்ற பிரிவானது அதன் பெறுமதியை விட அதிகமாக காணப்படும் பட்சத்தில் அதன் உண்மை பெறுமதி குறைவான செலவில் விற்கப்படலாம்.பயன்பாட்டு பெறுமதியை மதிப்பிடுகையில் குறிப்பிட நேரத்தின் பண பெறுமதியின் சந்தை மதிப்பீடுகள் மற்றும் அச்சொத்து எதிர்கொள்கின்ற குறிப்பிட்ட இடர்கள் ஆகியன முன் வரி கழிவு விகிதத்தை பயன்படுத்தி மதிப்பிடப்பட்ட எதிர்கால காசோட்டங்களானது கழிக்கப்படுகின்றன.பணத்தை உருவாக்குகின்ற பிரிவானது மிகச் சிறிய இனம் காணப்படக்கூடிய சொத்துக் குழுவாகும். இது ஏனைய சொத்துக்கள் மற்றும் குழுக்களில் இருந்து பெரும்பாலும் சுயாதீனமாக செயற்பட கூடிய காசோட்டத்தை உருவாக்கக் கூடிய சிறிய அடையாளம் காணக்கூடிய சொத்துக் குழுவாக பண உருவாக்க பிரிவு காணப்படுகின்றது.

சொத்து தொடர்பாக முன்னெடுத்துச் செல்லப்படும் தொகை அல்லது அதன் பண உருவாக்க பிரிவானது அது தொடர்பில் மீள் அறவிடப்படும் தொகையை விட அதிகமானால் சேதம் தொடர்பான இழப்பு ஒன்று பதியப்படுகின்றது. இத்தகைய சேதம் தொடர்பான இழப்புகள் இலாபம் அல்லது நட்டம் தொடர்பான கூற்றில் பதியப்படுகின்றது. பண உருவாக்க பிரிவுகள் தொடர்பில் ஏதாவது சேதம் தொடர்பான இழப்புகள் அவதானிக்கப்படும் பட்சத்தில் இப்பிரிவுகளுக்காக நன்நோக்கத்தின் அடிப்படையில் ஒதுக்கப்பட்ட முன்னெடுத்துச் செல்லப்படும் தொகையை முதலில் குறைப்பதற்கான வழிமுறைகள் மேற்கொள்ளப்படும் மற்றும் இப்பிரிவில் உள்ள ஏனைய ் சொத்துக்கள் தொடர்பில் முன்னுரிமைபடுத்தலின் அடிப்படையில் முன்னெடுத்துச் செல்லப்படும் தொகையை குறைப்பதற்கான வழிமுறைகள் மேற்கொள்ளப்படும்.

2.2.10 பொறுப்புகள் மற்றும் ஏற்பாடுகள்

நிதி நிலை தொடர்பான கூற்றில் தற்போதைய பொறுப்புகளாக வகைப்படுத்தப்பட்ட பொறுப்புகள் ஆனது கேள்வியின் நிமித்தம் கொடுக்க வேண்டிய தொகை அல்லது அறிக்கையிடும் திகதியில் இருந்து ஒரு வருடத்திற்கும் பிந்திய காலப்பகுதியினுல் செலுத்தவேண்டியது.

அதேபோல் தற்போதைய பொறுப்பு சாராதவைகள் அறிக்கையிடும் திகதியில் இருந்து ஒரு வருடத்திற்கும் பிந்திய காலப்பகுதியில் செலுத்தப்பட வேண்டிய கொடுப்பனவுகள் ஆகும்.

நிதிக்கூற்றுகளை தயாரிக்கின்ற பொழுது அறியப்பட்ட சகலவிதமான பொறுப்புகளும் கருத்திற் கொள்ளப்படும்..

2.2.1.1 ஊழியர் நலன்கள்

வரையறை செய்யப்பட்ட பங்களிப்புத் திட்டம்

வரையறை செய்யப்பட்ட பங்களிப்புத் திட்டமானது சேவைக்கு அமர்த்தியதன் பின்னர் கிடைக்கக்கூடிய நன்மை பயக்கின்ற திட்டமாகும். இதன் அடிப்படையில் ஒரு அமைப்பானது நிரந்தர தொகை ஒன்றினை தனியான வேறொரு அமைப்பிற்கு செலுத்துகின்றது. இதன் அடிப்படையில் சட்ட ரீதியாகவோ அல்லது ஆக்கப்பூர்வமாகவோ மேலதிக கொடுப்பனவுகளை செலுத்த வேண்டிய கடப்பாடு இல்லை. ஊழியர்களுக்காக செலுத்தப்படும் ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியன சகல ஊழியர்களையும் உள்ளடக்கியதாக காணப்படுவதுடன் இலாபம் அல்லது நட்டம் தொடர்பான கூற்றில் செலவாக அங்கீகரிக்கப்படுகின்றது.

ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியமாக கம்பெனி ஆனது முறையே 12, 3 வீதங்களை செலுத்தி வருகின்றது.

வரையறை செய்யப்பட்ட நலத்திட்டங்கள்

வரையறை செய்யப்பட்ட பங்களிப்பு திட்டத்திற்கு மேலதிகமாக வேலைக்கு அமர்த்தியதன் பின்னர் வழங்கப்படும் மற்றுமொரு திட்டமாக வரையறை செய்யப்பட்ட நலத் திட்டம் காணப்படுகின்றது.சுயாதீனமான காப்பீட்டு கணிப்பாளர்களினால் வரையறை செய்யப்பட்ட நலன்கள் கணிப்பிடப்படுகின்றன. வரையறை செய்யப்பட்ட நல கடப்பாடுகளின் தற்போதைய பெறுமதியானது எந்த நாணயத்தில் நலன்கள் செலுத்தப்படுகின்றதோ அதே நாணயத்தில் அவற்றிற்கான எதிர்கால வட்டிவீதம் மதிப்பிடப்பட்ட எதிர்கால காசோட்ட தொகையை கழிப்பதன் மூலம் தீர்மானிக்கப்படுகின்றது. சம்மந்தப்பட்ட பொறுப்புகளுக்கு ஏற்ப இவற்றிற்கான சராசரி முதிர்ச்சி காலம் காணப்படுகின்றது.

பல்வேறு காரணிகளின் அடிப்படையில் வரையறை செய்யப்பட்ட நல கடப்பாடுகளின் தற்போதைய பெறுமதி காணப்படுகின்றது. பல்வேறு விதமான ஊகங்களை அடிப்படையாகக் கொண்டு காப்பீட்டு கணிப்பீட்டின் அடிப்படையில் பல்வேறு விதமான நன்மைகள் தீர்மானிக்கப்படுகின்றன. வரையறை செய்யப்பட்ட ஓய்வூதிய கடப்பாடுகளை தீர்மானிப்பதற்காக பயன்படுத்தப்படும் பிரதான ஊகங்கள் குறிப்பு 19.1 இல் தரப்பட்டுள்ளது. இத்தகைய ஊகங்களில் ஏதாவது மாற்றங்கள் காணப்படும் பட்சத்தில் அவை வரையறை நல கடப்பாடுகளை முன்னெடுத்துச் செல்லும் தொகையில் தாக்கத்தினை ஏற்படுத்துகின்றன.

வரையறை செய்யப்பட்ட நல கடப்பாடுகள் தொடர்பான காப்பீட்டு சார் நன்மைகள் மற்றும் இழப்புகள் ஆகியன எந்த காலப்பகுதியில் அவை நிலவுகின்றதோ அவ் முழு காலப்பகுதிக்குமான பூரணத்துவமிக்க வருமானத்தின் அடிப்படையில் கணிப்பிடப்படுகின்றன. அத்தகைய காப்பீடு சார்ந்த இலாபங்கள் அல்லது நட்டங்கள் உடனடியாக தேக்கி வைக்கப்பட்ட வருமானங்களாக பதியப்படுகின்றன. அடுத்து வரும் வருடங்களில் அவை இலாபமாகவோ அல்லது நட்டங்களாகவோ மீள் வகைப்படுத்தப்படுவதில்லை.

ஊழியர்களுக்கான ஓய்வூதிய பணிக்கொடைகளை செலுத்துவதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சகல ஊழியர்களுக்கும் அவர்களது சேவைக்கு சேர்ந்த முதல் வருடத்தில் இருந்து இலங்கை கணக்கீட்டு தராதரங்களுக்கு ஏற்றவகையில் இவை வழங்கப்படுகின்றன. இருப்பினும் 1983 ஆம் ஆண்டு 12.ஆம் இலக்க பணிக்கொடை செலுத்தல் சட்டத்தின் கீழ் ஐந்து வருடங்கள் தொடர்ச்சியாக சேவையை பூரணப்படுத்திய ஊழியர்களுக்கு மாத்திரமே இத்தகைய பொறுப்புகள் எழுகின்றன.

இந்த பொறுப்பிற்கு வெளியிலிருந்து நிதி வழங்கப்படுவதில்லை.

குறுகிய கால நலன்கள்

ஊழியர்களுக்கான குறுகிய கால நலன் கடப்பாடுகள் ஆனது கழிக்கப்படாத அடிப்படையில் கணிக்கப்படுவதுடன் சம்மந்தப்பட்ட சேவைகளை வழங்கியதற்கான செலவாக பதியப்படுகின்றன.

2.2.10.2 அரசாங்கக் கொடைகள்

அரசாங்க கொடைகள் ஐந்தொகையில் குறிப்பிடப்படுகின்றன. 2011 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க குறைவாக தொழிற்படுகின்ற தொழில் முயற்சிகளை மீளாய்வு செய்தல் மற்றும் குறைவாக பயன்படுத்தப்படுகின்ற சொத்துக்கள் தொடர்பான சட்டத்தின்கீழ் பெறப்பட்ட தேறிய சொத்துக்களையும் உள்ளடக்கியதாக இது காணப்படுகின்றது. மேலும் நிறுவனத்தின் தொழிற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வது தொடர்பான பங்களிப்பு செய்யப்பட்ட பின்னரான தொழிற்பாட்டு முதலீட்டையும் உள்ளடக்கியுள்ளது.

2.2.10.3 ஏற்பாடுகள்

கடந்த கால நிகழ்வொன்றின் காரணமாக கம்பெனிக்கு தற்சமயம் சட்ட ரீதியான அல்லது ஆக்கபூர்வமான கடப்பாடு ஒன்று காணப்படும் பட்சத்தில் அதனை நம்பக முறையில் அளவிடக்கூடிய நிலையில் இதனால் வழங்கப்படக் கூடிய நிலையில் உள்ள வளங்கள் ஆனது அதன் மூலமாக கிடைக்கக்கூடிய பொருளாதார நலன்களை அடிப்படையாகக் கொண்டு இந்த கடப்பாடுகளை தீர்க்க வேண்டிய நிர்பந்தம் ஏற்படுகின்ற பொழுது இந்த ஏற்பாடு அங்கீகரிக்கப்படுகிறது..

2.2.11 கணக்கீட்டு கொள்கைகளில் மாற்றங்கள்

இங்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கொள்கைகள் ஆனது கடந்த வருடத்துடன் ஏற்புடையதாக காணப்படுகின்றது.

2.3 மதிப்பீடுகள் மற்றும் தீர்மானங்களை பயன்படுத்துதல்

கம்பெனியின் நிதிக்கூற்றுகளை தயாரிக்கின்ற பொழுது ஏற்படுகின்ற தேவைப்பாடுகளானது முகாமைத்துவம் ஆனது தீர்மானங்களை மேற்கொள்ளல், அறிக்கையிடப்பட்ட வறுமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புகள், அவசரகால பொறுப்புகள் தொடர்பான வெளிப்படுத்தல்கள் ஆகியவற்றை அறிக்கையிடும் காலத்தின் இறுதியில் தாக்குகின்ற விடயங்களாகும். இருப்பினும் இத்தகைய ஊகங்களிலும் மதிப்பீடுக்ளிலும் காணப்படுகின்ற நிச்சயமற்ற தன்மையின் காரணமாக சொத்துக்களை அல்லது பொறுப்புகளை முன்னெடுத்துச் செல்வதற்கு அவசியமான பொருள் சார்ந்த சீர்செய்தல்கள்,விளைவுகள் ஆகியவற்றை எதிர்காலத்தில் தாக்கக் கூடியதாக உள்ளது.

இத்தகைய தீர்மானங்கள், மதிப்பீடுகள் , வரலாற்றுரீதியான அனுபவங்கள் மற்றும் ஏனைய காரணிகளுடன் சூழ்நிலையின் கீழ் நியாயமான சம்பவங்கள் என நம்பக்கூடிய எதிர்பார்ப்புகளையும் உள்ளடக்கியதாய் இருத்தல் வேண்டும. அதேவேளை மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் அல்லது மதிப்பீடுகள் ஆகியவற்றில் இருந்து உண்மையான அனுபவத்தின் பெறுபேறுகள் மாறுபட்டதாகவும் இருக்கலாம். மதிப்பீடுகள் மற்றும் அடிப்படையாக மேற்கொள்ளப்பட்ட ஊகங்கள் ஆகியன தொடர்ச்சியாக மீளாய்வு செய்யப்படுகின்றன. கணக்கீட்டு மதிப்பீடுகளுக்கான ` இத்தகைய மீளாய்வானது குறிப்பிட்ட காலப்பகுதியை தாக்குகின்ற பொழுது மற்றும் எதிர்காலத்தில் ஏதாவது தாக்கங்களை ஏற்படுத்தும் எனக் கருதுகின்ற பொழுது மதிப்பீடு செய்யப்பட்ட காலப்பகுதியில் இத்தகைய மீளாய்வுகள் தாக்கத்தினை ஏற்படுத்தும் என அங்கீகரிக்கப்படுகிறது..

கம்பெனியின் கணக்கீட்டுக் கொள்கைகளை பிரயோகிக்கின்ற காலப்பகுதியில் எதிர்காலம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட பிரதான ஊகங்கள் மற்றும் அறிக்கையிடும் திகதியில் குறிப்பிடக்கூடிய இடர்களை உடைய தீர்மானங்கள், சொத்துக்கள் தொடர்பில் முன்னெடுத்துச் செல்லப்படும் தொகைகள் தொடர்பில் பொருள் சார்ந்த சீர்செய்தல்களை மேற்கொள்வதற்கு அவசியமான முன்னெடுத்துச் செல்லப்படும் தொகைகள் அடுத்த வருடத்திற்கான சொத்துகள் மற்றும் பொறுப்புகள் பற்றிய விடயங்கள் ஆகியவற்றுடன் எதிர்காலம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட பிரதான ஊகங்கள், அறிக்கையிடும் திகதியில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டிற்கான மூலங்கள் ஆகியவற்றுடன் கீழே கலந்துரையாடப்பட்டுள்ளன.

நிதி சாரா சொத்துக்கள் தொடர்பான சேதங்கள்

சொத்து அல்லது பண உருவாக்க பிரிவு ஒன்றின் முன்னெடுத்துச் செல்லப்படுகின்ற பெறுமதியானது அதனால் அறவிடப்படக்கூடிய தொகையை விட அதிகமாக காணப்படும் பட்சத்தில் சேதம் ஏற்படுகின்றது. அதன் உண்மை பெறுமதியை விட இது அதிகமாக இருப்பதுடன் குறைந்த செலவில் விற்பனை செய்யப்படக் கூடியதாகவும் காணப்படுகின்றது. உண்மைப் பெறுமதி குறைந்த செலவு விற்பனை தொகையானது காணப்படுகின்ற தரவுகள் வியாபார கொடுக்கல் வாங்கல் சார்ந்த நிகரான சொத்துக்கள் அல்லது அத்தகைய சொத்துக்களை விற்பனை செய்யப்படுகின்ற பொழுது அவதானிக்கக்கூடிய சந்தை விலைகள் ஆகியவற்றின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகின்றது. பயன்படுத்தியவற்றின் பெறுமதி தொடர்பானது கணிப்பீடானது கழிக்கப்பட்ட காசோட்ட மாதிரியை அடிப்படையாகக் கொண்டு தீர்மானிக்கப்படுகின்றது. அறவிடக்கூடிய தொகையானது கழிக்கப்பட்ட காசோட்ட மாதிரிக்கு பயன்படுத்தப்பட்ட மற்றும் எதிர்பார்க்கப்பட்ட எதிர்கால காசோட்ட உள்வருகைகள் மற்றும் மேலதிக நோக்கங்களுக்காக பயன்படுத்தபட்ட வளர்ச்சி வீதம் ஆகியவற்றின் அடிப்படையில் அறவிடக்கூடிய தொகையானது மிகவும் கூறுணர்வுமிக்கதாக காணப்படுகின்றது.

சொத்து பொறித்தொகுதி, உபகரணம் ஆகியவற்றின் தேய்மானம்

சொத்துக்களை பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கின்ற காலம் மற்றும் இத்தகைய சொத்துக்களின் பொருளாதாரம சார்ந்த ஆயுட்காலம் ஆகியவற்றின் அடிப்படையில் இவற்றின் பயன்பாட்டு காலம் மற்றும் சொத்து பொறித்தொகுதி, உபகரணம் ஆகியவற்றின் எஞ்சிய பெறுமதிகள் ஆகியவற்றை முகாமைத்துவம் தீர்மானிக்கின்றது. தொழில்நுட்ப ரீதியான முன்னேற்றங்கள் அல்லது சம்பந்தப்பட்ட சொத்துக்களின் பயன்பாடுகள் ஆகியன இவற்றின் உண்மையான பயன்பாட்டுக் காலம் எஞ்சிய பெறுமதி ஆகியன இவற்றின் சூழ்நிலையில் பின்னர் ஏற்படுகின்ற மாற்றங்கள் ஆகியவற்றுக்கு ஏற்ப மாறுபடுகின்றன. சொத்து பொறித்தொகுதி, உபகரணம் ஆகியவற்றின் பிரதான விடயங்கள் தொடர்பான பயன்பாட்டுக் காலம் மற்றும் எஞ்சிய பெறுமதிகள் ஆகியவற்றை வருடாந்தம் முகாமைத்துவம் மீளாய்வு செய்து வருகின்றது.

பெறுகைகள் தொடர்பான தேய்மானம்

ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் சகலவிதமான பெறுகைகள் தொடர்பில் இலாபம் அல்லது நட்டம் தொடர்பான கூற்றில் ஏதாவது மேலதிகமாக படிகள் பதியப்பட வேண்டுமா என்பதை ஆராய்வது தொடர்பில் கம்பெனி மீளாய்வு செய்து வருகின்றது. அத்தகைய மேலதிக மதிப்பிடுவது தொடர்பில் அவற்றுக்கான நிலுவை காலப்பகுதியில் மற்றும் அவற்றின் அறவீடுகள் தொடர்பில் ஏதாவது நிச்சயமற்ற தன்மைகள் காணப்படுகின்றதா மற்றும் ஏனைய காரணிகள் போன்றவற்றை மதிப்பீடு செய்யும் முகமாக முகாமைத்துவமானது அதன் தீர்மானம் சார்ந்த காரணிகளை பிரயோகிக்கிறது.

3. விநியோகிக்கப்பட்ட தராதரங்கள் ஆனால் இதுவரை பிரயோகிக்கப்படவில்லை

SLFRS 9 **–** நீதி ரீதியான கருவிகள்

SLFRS 9 ஆனது தற்போது காணப்படுகின்ற வழிகாட்டியான LKAS 39 நீதி ரீதியான கருவிகளை பிரதியீடு செய்கின்றது: அங்கீகாரம் மற்றும் முகாமைத்துவம்.

நிதி ரீதியான சொத்துக்கள் தொடர்பான சேதங்களை மதிப்பிடுவதற்கான கடன் இழப்பு மாதிரி மற்றும் புதிய பொதுவான காப்பு கணக்கீட்டு தேவைப்பாடுகள் ஆகியன பிரயோகிக்கப்படுகின்றன. அங்கீகாரம் தொடர்பான வழிகாட்டிகள் மற்றும் LKAS 39 இருந்து நிதி ரீதியான கருவிகளை அங்கீகாரம் இழக்கச் செய்தல் ஆகியவற்றையும் இவை முன்னெடுத்துச் செல்கின்றன.

2018 ஜனவரி 1 இல் இருந்து அல்லது அதற்கு பின்னர் ஆரம்பிக்கின்ற வருடாந்த அறிக்கையிடும் காலப்பகுதி இவற்றுள் எது முதலில் நிகழ்கின்றதோ அதனடிப்படையில் SLFRS 9 ஆனது செயல்படுகின்றது.

வரையறுக்கப்பட்ட இலங்கை சீனி (தனியார்) கம்பனியின்
2017 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான
நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

4.	வருமானம்	2017 ரூபா	2016 ரூபா
4.1	**பொழிப்பு**		
	பொருள் விற்பனை	7,616,939,721	7,728,890,324
		7,616,939,721	7,728,890,324
4.2	பிள்வரும் விடயங்களிலிருந்து பெறப்பட்ட வருமானம்		
	சீனி	4,637,042,513	4,059,937,569
	சக்கரைப் பாகு	987,750	738,750
	ஈவன்ஏ	2,978,909,458	3,668,214,005
		7,616,939,721	7,728,890,324

4.3 பிரிவுசார் தகவல்கள்

	தலைமை அலுவலகம் ரூபா	பெலவத்த பிரிவு ரூபா	செவனகல பிரிவு ரூபா	நீக்கம் ரூபா	மொத்தம் ரூபா
பிரிவுசார் வருமானம்	58,811,953	4,706,938,137	2,910,001,583	(58,811,953)	7,616,939,721
பிரிவுசார் பெறுபேறு					
மொத்த இலாபம் /(நட்டம்)	58,811,953	373,404,840	1,140,838,897	(58,811,953)	1,514,243,737
ஏனைய					
மூலதன செலவினம்	1,144,461	75,383,798	56,691,339	-	133,219,598
தேய்மானம்	3,230,529	232,284,484	116,925,178	-	352,440,192
பிரிவுசார் சொத்துக்கள்					
நடைமுறையல்லா சொத்துக்கள்	7,117,715	1,725,673,089	470,464,640	-	2,203,255,444
நடைமுறைச் சொத்துக்கள்	184,989,984	3,151,526,160	2,380,356,715	(515,252,025)	5,201,620,835
பிரிவுசார் பொறுப்புக்கள்					
நடைமுறையல்லாத பொறுப்பு	-	494,651,006	162,083,310	-	656,734,317
நடைமுறைப் பொறுப்பு	183,314,224	1,476,540,931	574,813,765	(515,252,025)	1,719,416,895

5.	ஏனைய வருமானமும், உழைப்பும்	2017 ரூபா	2016 ரூபா
	ஏனைய சேவை வருமானம்	16,004,000	40,274,918
	நானாவித வருமானம்	31,853,289	30,028,563
		-	-
		47,857,289	70,303,481

6.	நிதிக் கிரயமும், வருமானமும்	2017 ரூபா	2016 ரூபா
6.1	**நிதிக் கிரயம்**		
	வங்கிக் கடன் மீதான வட்டிச் செலவினம்	32,358,024	13,955,202
	வங்கிக் கடன் மீதான வட்டிச் செலவினம்	80,584,514	49,837,683
	லீசின் பொறுப்புக்கள் மீதான நிதி கடப்பாடுகள்	7,562,267	8,199,309
	நிலையான சொத்து அகற்றல் மூலமான நட்டம்	40,323	100,081
		120,545,127	72,092,275
6.2	**நிதி வருமானம்**		
	விவசாயிகளின் நிலுவைக் கடன் மீதான வட்டி வருமானம்	57,319,129	61,600,660
	நிலையான வைப்புக்கள் மீதான வட்டி வருமானம்	163,205,749	89,538,596
	ஏனைய வட்டி வருமானம்	-	328,115
		220,524,878	151,467,371

வரையறுக்கப்பட்ட இலங்கை சீனி (தனியார்) கம்பனியின்
2017 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான
நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

7. வரிக்கு முன்னரான இலாபம்

அறவிட்ட பின்னர் ஆரம்பம்	2017 ரூபா	2016 ரூபா
விற்பனைக் கிரயத்தில் உள்ளடக்கப்பட்டது		
பின்வருவன உள்ளடங்களாக ஊழியர் பயன்கள்		
குறித்த ங்களிப்புத் திட்டக் கிரயம் - ஊ.சேநி. மற்றும் ஊ.நம்நி.	178,685,022	176,489,982
தேய்மானம்	292,408,578	270,717,322
நிருவாக செலவினத்தில் உள்ளடக்கப்பட்டவை		
பின்வருவன உள்ளடங்களாக ஊழியர் பயன்கள்		
- குறித்த பயன் திட்டக் கிரயம் - பனிக்கொடை	71,127,491	36,000,000
- குறித்த பங்களிப்புத் திட்டக் கிரனம் - ஊ.சே.நி. மற்றும் ஊ.ந.நி.	50,087,154	47,455,070
தேய்மானம்	59,634,601	51,075,025
கனக்காய்வு கட்டனம்	850,000	850,000
விவசாயிகளின் கடன்களில் அறவிட முடியாக் கடன்	62,228,740	33,425,595

8. வருமான வரிச் செலவினம் (மீளளிப்பு)

	2017 ரூபா	2016 ரூபா
நடைமுறை வருமான வரி	54,319,043	183,699,514
பிற்போடப்பட்ட வரிக் கட்டனம்/ (மீளளிப்பு) (குறிப்பு 8.2)	220,724,279	(6,649,239)
	275,043,322	177,050,275

8.1 நடைமுறை வரிச் செலவினம் /(வருமானம்) மற்றும் சீராக்கல் மற்றும் கனக்கீட்டு இலாபம் / (நட்டம்) உற்பத்தி

வரிக்கு முன்னரான கனக்கீட்டு இலாபம் /(நட்டம்)	402,703,163	1,006,287,730
முன்னைய ஆண்டின் இலாபத்திற்கான சீராக்கல்	-	(1000)
வரிக்கு முன்னரான சீராக்கல் செய்த கனக்கீட்டு இலாபம் /(நட்டம்)	402,703,163	1,006,286,730
ஒருங்கினையாத அம்சங்கள்	436,847,073	404,493,267
ஒருங்கினைந்த அம்சங்கள்	(363,677,132)	(488,654,435)
முன்னைய ஆண்டின் இலாபத்துக்கான சீராக்கல்		
வரித் தேவைக்கான வியாபார இலாபம் / (நட்டம்)	475,873,104	922,125,562
வரிப் பொறுப்புக்குரிய ஏனைய வருமான மூலம்		
வட்டி வருமானம்	220,524,878	89,538,596
மொத்த மதிப்பீட்டு வருமானம்	696,397,982	1,011,664,158
ஆண்டினுள் பயன்படுத்திய வரி நட்டம்	(243,739,294)	(355,594,467)
வரி விதிக்கத்தக்க வருமானம்	452,658,688	656,069,692
வருமான வரி 12%	54,319,043	183,699,514
முன் கொண்டு வந்த வரி நட்டம்	926,202,880	1,281,797,347
ஆண்டினுள் ஏற்பட்ட வரி நட்டம்	434,310,991	-
ஆண்டினுள் பயன்படுத்திய வரி நட்டம்	(400,106,947)	(355,594,467)
முன் கொண்டு சென்ற வரி நட்டம்	960,406,925	926,202,880

8.2 பிற்போடப்பட்ட வரிச் சொத்து

	நிதி நிலைமை பற்றிய கூற்று		இலாப, நட்டம் பற்றிய கூற்று	
	2017	2016	2017	2016
பிற்போடப்பட்ட வரிப் பொறுப்பு	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
சொத்து, பொறி மற்றும் உபகரணம் மதான	(311,909,307)	(37,040,188)	(274,869,119)	(5,280,730)
	(311,909,307)	(37,040,188)	(274,869,119)	(5,280,730)
பிற்போடப்பட்ட வரிச் சொத்து				
சொத்து, பொறி மற்றும் உபகரணம் மதான	-	-	-	-
ஓய்வூதியப் பயன்கடப்பாடு மீதான	183,352,056	129,207,216	54,144,840	11,929,969
	183,352,056	129,207,216	54,144,840	11,929,969
			(220,724,279)	6,649,239
பிற்போடப்பட்ட வருமான வரி மீளளிப்பு	-			
தேறிய பிற்போடப்பட்ட வரிச் சொத்து/(பொறுப்பு)	(128,557,251)	92,167,028		

9. பங்கொன்றின் உழைப்பு / (நட்டம்)

9.1 ஒரு பங்கிற்கான அடிப்படை சட்டல்களளது (இழப்பு) குறிப்பிட்ட வருட காலப்பகுதியின் பொழுது மதிப்பிட்ப்பட்ட சாதாரன பங்கு நிலுவை என்னிக்கை, குறிப்பிட்ட வருடத்திற்கான தேறிய இலாபம் அல்லது நட்டத்தினால் பிரிப்பதன் மூலம் கனிப்பிடப்படுகின்றது.

9.2 தொகுதியாக பயன்படுத்தப்பட்ட தொகை

ஒரு பங்கிற்காக சட்டல்களாக சாதாரன பங்காளர் தொடர்பில் காணப்பட்ட தேறிய இலாபம் அல்லது நட்டம்	2017 ரூபா	2016 ரூபா
	127,659,841	829,237,456

பகுதியாக பயன்படுத்தப்பட்ட சாதாரன பங்குகளின் என்னிக்கை	2017 தொகை	2016 தொகை
பங்கிற்கான அடிப்படை சட்டல்களுக்கு ஏற்புடைய மதிப்பிடப்பட்ட சாதாரன பங்குகளின் என்னிக்கை	100	100

வரையறுக்கப்பட்ட இலங்கை சீனி (தனியார்) கம்பனியின்
2017 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான
நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

10. சொத்து, பொறி மற்றும் உபகரணம்

10.1 மொத்த கொண்டு வந்த தொகைகள்

	2017.01.01 ஆம் திகதியில் மீதி ரூபா	கூட்டுக: மாற்றல் ரூபா	அகற்றல் ∴ மாற்றல் ரூபா	2017.12.31 ஆம் திகதியில் மீதி ரூபா
காணி	44,149,728	-	-	44,149,728
காணி அபிவிருத்தி	165,206,052	-	-	165,206,052
தொழில்சாலை கட்டிடங்கள்	241,393,459	2,971,321	-	244,364,780
ஏனைய கட்டிடங்கள்	229,159,601	-	-	229,159,601
வெளிக்கல பொறி மற்றும் பொறித்தொகுதி	415,045,104	9,865,741	-	424,910,845
நீர்ப்பாசன மற்றும் நாளாவித பொறித்தொகுதி	195,178,651	12,026,894	-	207,205,545
தொழில்சாலை பொறி மற்றும் பொறித்தொகுதி	2,728,688,860	51,251,145	-	2,779,940,005
ஏனைய பொறி மற்றும் பொறித்தொகுதி	118,798,403	34,360,000	-	153,158,403
களஞ்சிய தாங்கி	63,398,475	-	-	63,398,475
வீதியும், பாலமும்	111,179,516	-	-	111,179,516
ஆய்வுகூட உபகரணங்கள்	49,291,526	-	-	49,291,526
மோட்டார் வாகனம்	162,126,356	-	-	162,126,356
தளபாடம், பொருத்தல்கள் மற்றும் உபகரணம்	170,605,731	12,918,800	(105,188)	183,419,343
படிவு வலய உட்கட்டமைப்பு வசதிகள்	73,193,739	-	-	73,193,739
	4,767,415,198	123,393,901	(105,188)	4,890,703,912
நிதி லீசின் அடிப்படையிலான சொத்துக்கள்				
மோட்டார் வாகனம்	58,013,750	-	-	58,013,750
